ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

26.10.2011 - மலர் 08, இதழ் 34



## வாசகர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள்



## வரைபடமொன்றை யும் வழிமுறைகள்



## பொதுநலன் சார்ந்த சமூக சேவைகள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம்

பிரித்தானியர் முன்வைத்த ஒப்பந்தத்தை நிறைவேற்றப் பிணையொன்று அவசியம் என்பதை ஆங்கிலேயர் ஒல்லாந்தருக்கு அறிவித்தனர். பிணையாளர்களாக இரு பிரதேச தலைவர்களையும் அவர்கள் கேட்டனர்.

இவர்கள் முன்னர் பிரித்தானிய பேரரசரின் கடல் பிரதேச ஆட்சியாளர்களுக்கு கீழே கையொப்பமிட்ட எம்மால் முன் வைக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்பவர்களாகவும் இந்த நிபந்தனைகளை 'மேஜர் ஃபொன்பர்' ஏற்றுக் கொண்டால் ஒப்பந்தப் பத்திரம் கிடைத்த அரைமணி நேரத்திற்குள் அதற்கு கையொப்பம் இடப்பட வேண்டும் என்றும் அதற்குப் பிணையாக அனுப்பும் பிரதேச தலைவர்கள் இருவரை எம்மிடம் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் ஆங்கிலேயர் அறிவித்தனர். இதன்பின்னர், திருகோணமலை முகாமில் வைத்து கையொப்பத்துடன் நிறைவேற்றப்பட்ட இந்த ஒப்பந்தம் 1795 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி நடைமுறைப் படுத்தப்பட்டது. இதில் பீட்டர் ரைனர் ஷே.ஸ்டுவார்ட் என்பவரே கையொப்பம் இட்டார்.

இந்த ஒப்பந்தப் பத்திரத்தில் ஃபொன்பர் கையொப்பமிட்டதும் திருகோணமலை, பிரித்தானியரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. அவ்வாறே, திருகோணமலை துறைமுகத்திற்கு நேர் எதிரே இருந்த 'ஒஸ்டென்பர்க்' கோட்டை ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி மேற்குறித்த ஒப்பந்தங்களுக்கு அடிபணிந்து ஆங்கிலேயரின் கைகளுக்கு மாறியது. அத்துடன், 'மேஜர் ப்ரேசர்' என்பவரின் தலைமையின்கீழ் ஆங்கிலப் படையணியொன்று மட்டக்களப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கிருந்த ஒல்லாந்த கோட்டையும் செப்டெம்பர் 18 ஆம் திகதி அப்படையணிகளால் கைப்பற்றப்பட்டது.

எஞ்சிய ஒல்லாந்த கோட்டைகளைக் கைப்பற்றுவதற்காக, செப்டெம்பர் 24 ஆம் திகதி 'கேர்னல் ஸ்டுவார்ட்' என்பவரின் தலைமையில் ஆங்கிலப் படைகள் புறப்பட்டன. அதேமாதம் 27 ஆம் திகதி பருத்தித்துறைக்கோட்டையும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "குடும்பத்திற்கும் நாட்டிற்கும் உலகிற்கும் நல்லதோர் அங்கமாக இருப்பேன் என்ற உறுதி உங்களுக்கு இருக்க வேண்டும்"

## கலாநிதி அப்துல் கலாம் மாணவர்களுக்கு அறிவுரை

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி கலாநிதி அப்துல் கலாமின் 80 ஆவது பிறந்த நாளையிட்டு, அண்மையில் 'பசும்புலரி' என்றவோர் அமைப்பின் சார்பில் 'பாதையெங்கும் பசுமை' என்றொரு நிகழ்ச்சி தமிழ்நாட்டின் கோவையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது, அங்கு வருகை தந்திருந்த பல்லாயிரம் மாணவர்கள் மத்தியில் கலாநிதி அப்துல் கலாம் உரையாற்றியதோடு, மாணவர்களுக்கு சிறந்த அறிவுரைகளையும் வழங்கியிருந்தார்.



அவரது கருத்துக்கள் இந்திய மாணவர்களுக்கு மட்டுமல்ல; உலகிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த அறிவுரையாக அமையும் என எண்ணுகின்றோம். எனவே, அங்கு அவர் உரையாற்றிய சில விடயங்களை உங்களுக்காக வழங்குகின்றோம்.

"உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பறக்க வேண்டுமென்ற உணர்வு இருக்க வேண்டும். வாழ்வில் பெரிய லட்சியத்தை அடைய அது வழிவகுக்கும். உங்கள் உள்ளத்தில் லட்சிய ஒளி பிரகாசிக்கட்டும். லட்சியத்தை அடைய அறிவாற்றலைப் பெருக்க வேண்டும். அதை அடைய உழைப்பு முக்கியம். உழைத்துக்கொண்டே இருக்க வேண்டும். அத்துடன், விடா முயற்சி இருந்தால், வெற்றி உங்களை வந்து சேரும். வரலாற்றின் பக்கங்களில் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. உலகத்திற்கு அதை படிக்க வைப்பது, நமது கையில்தான் உள்ளது" என்றார்.

மேலும் தொடர்ந்து பேசிய அவர்: "எந்த மாயவலையிலும் விழமாட்டேன் என்ற உறுதி இருந்தால், வரலாற்றுப் பக்கத்தில் நீங்கள் இடம்பிடிப்பீர்கள். வாழ்வில் வெல்ல ஐந்து விடயங்கள் அவசியம். முதலில் லட்சியம் வேண்டும். அதை அடையக்கூடிய அறிவைத் தேடிப்பெற வேண்டும். அதற்கு கடும் உழைப்பு வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு பயப்படக்கூடாது. பிரச்சினைகளைத் தோல்வியடையச் செய்து, வெற்றியடைய வேண்டும். விடாமுயற்சி வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல ஒழுக்கம் வேண்டும். குடும்பத்திற்கும் நாட்டிற்கும் உலகிற்கும் நல்லதோர் அங்கமாக இருப்பேன் என்ற உறுதி உங்களுக்கு இருக்க வேண்டும். நீங்கள் அனைவரும் சமூகத்தில் பொறுப்புள்ள மனிதர்களாக மாற வேண்டும்" என்றார்.


# ஒரே பாடசாலையில் 8 வருடங்களுக்கு மேல் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

## கல்வியமைச்சு நடவடிக்கை

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய பாடசாலைகளில் தொடர்ச்சியாக எட்டு வருடங்களுக்கு மேல் சேவையாற்றும் சகல ஆசிரியர்களையும் இடமாற்றம் செய்யும் திட்டமொன்றை கல்வி அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

இதற்கமைய, மாகாண சபையின் கீழுள்ள கிராமப்புற பாடசாலைகளில் கடமையாற்று முகமாகவே அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது. தேசிய பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் காணப்படுகின்றபோதும், மாகாண சபைகளின்கீழ் இயங்கும் கிராமப்புற பாடசாலைகளில் கற்பிப்பதற்கு போதியளவு ஆசிரியர்கள் இல்லாமை பெரும் குறையாகவே காணப்படுகிறது. இதனால், அப்பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் கல்வியில் மிகவும் பின்தங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். இதுபற்றி கல்வி அமைச்சுக்குத் தெரியவந்துள்ளதை அடுத்தே, இத்திட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து மேற்கொள்ள கல்வி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அறியக்கிடைக்கின்றது.

அத்துடன், சில ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக இருபது வருடங்களுக்கு மேல் சகல வசதிகளுடனும் சேவையாற்றி வருகின்றனர். எனினும், கிராமப்புற பாடசாலைகளில் எவ்விதமான அடிப்படை வசதிகளும் இன்றி சிரமங்களுக்கு மத்தியில் சில ஆசிரியர்கள் சேவையாற்றி வருகின்றனர். எனவே, இதனை கருத்தில்கொண்டும் மேற்படி இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக மேலும் அறியக்கிடைக்கின்றது.



விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

### தரம் 1 இற்கு மாணவர் அனுமதி:

# தற்காலிக பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

2012 ஆம் ஆண்டில் தரம் 1 இற்கு அனுமதித்துக்கொள்ளப்படவுள்ள மாணவர்களின் பெயர்கள் அடங்கிய தற்காலிக பெயர்ப்பட்டியல் பாடசாலைகளில் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

இந்த தற்காலிக பெயர்ப்பட்டியல் சுமார் இரு வாரங்களுக்கு பாடசாலைகளில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி, பெயர்ப்பட்டியல் குறித்து திருப்திப்படாதவர்கள் அந்தந்தப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக் குழுவிடம் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்று மேலும் அறியக்கிடைக்கின்றது.



# வடக்கில் 79 பாடசாலைகளை புனரமைக்க இந்தியா நிதியுதவி

இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்துள்ள 79 பாடசாலைகளை புனரமைக்க இந்திய அரசாங்கம் 187 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது. அதன்படி, வட மாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் சேதமடைந்த நிலையிலுள்ள 79 பாடசாலைகளை புனரமைக்கவே, இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.



ஒன்பது மாதங்களுக்குள் மேற்படி 79 பாடசாலைகளையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் அறியவருகின்றது.

NORTH LEAD EDUCATIONAL CENTER

COMPUTER CLASSES
- Diploma in Microsoft Office
- Diploma in Graphic Designing
- Diploma in Web Designing
- Diploma in Programming
- Diploma in DTP
- Diploma in Hardware.
- Diploma in Accounting Packages
- Diploma in Multimedia
- Diploma in Kids Program
- Diploma in E-mail

ENGLISH SINGALA CLASSES
IELTS.Spoken English வகுப்புக்கள்


சிங்கள வகுப்புக்கள்

328, STANLY ROAD, JAFFNA.
TEL:222 4459,0772533390,FAX:22204460

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரைபடமொன்றின் முக்கியத்துவங்கள்

**மனிதன், மரம், செடி, கொடிகள், உயிரினங்களுக்குத் தேவையான உறைவிடத்தை ஏற்படுத்திக்கொடுப்பதால் இப்பூமி ஏனைய கிரகங்களைவிட, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. இப்பூமியானது சமுத்திரங்கள், மலைகள், காடுகள், ஆறுகள் பாலைவனங்கள், மாபெரும் கண்டங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. இவ்வாறான இடங்களில் மனிதன், தான் வாழக்கூடிய இடத்தை தனக்குப் பொருத்தமாக தெரிந்தெடுத்து வாழ்விடங்களை அமைத்துக்கொண்டுள்ளான்**




மனிதன் தான் வாழும் இடங்களை வரைபடம் மூலமாக, குறித்துக் காட்டும் மரபு பண்டைக்காலம் தொட்டு நடைமுறையில் இருந்து வருகின்றது. வரைபடக்கலைக்கு நீண்ட வரலாறு இருந்து வருவதோடு, மேலும் அது நடைமுறையிலும் உள்ளது. இந்த வரைபடக்கலையானது, பரந்தளவிலான ஒரு துறையாகவும் இருந்து வருகின்றது. அதனால், வரைபடம் பற்றிய தெளிவும் வரைபடமொன்றை எவ்வாறு வரைவது என்பது பற்றிய அறிவும் மிகவும் முக்கியமானதாகும்.

## வரைபடம் என்றால் என்ன?

பல அறிஞர்கள் வெவ்வேறு விதமான வரைபடங்களை பல்வேறு விதமாக வரைவிலக்கணப்படுத்துகின்றனர். அதில் முக்கியமானவர்களாக எனெக்ஷிமெண்டர், இரேடொஸ் தீனீஸ், ஹெரடோடஸ், கிளேடியஸ் தொலமி, ஸ்ட்ரோபோ ஆகியோர் முக்கியத்துவமானவர்கள். அவர்களது அனைத்து வரைபட விளக்கங்களிலும் சொல்லப்பட்ட விடயம் மிகவும் இலகுவான ஒரே விடயமாகவே இருந்து வருகின்றது. அதாவது, 'பூமியின் மேற்பரப்பில் காணப்படும் பல்வேறு விதமான அமைப்புக்கள் வெவ்வேறு விதமாக பொருத்தமான அடையாளங்கள் மூலம் நிறங்கள், குறியீடுகள், சின்னங்கள் என்பவற்றைப் பயன்படுத்தித் தட்டையான அமைப்பில் அல்லது காகிதத்தில் வரைந்து குறித்துக் காட்டும் அமைப்பே வரைபடம்' எனப்படுகின்றது.

## வரைபடம் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?


பூமியின் மேற்பரப்பில் உள்ள சமதரையில் காணப்படுவனவற்றை அடையாளமிட்டு புரிந்துகொள்ளும் வகையில் வரைந்து காட்டும் முறையே 'வரைபடம் வரையும் முறை' என்று கூறப்படுகின்றது. கோள்கள், கண்டங்கள், சமுத்திரங்கள், தீபகற்பங்கள், நாடுகள் போன்ற நாம் வாழும் பிரதேசங்களில் உள்ள தகவல்களை மிகத் துல்லியமாக அறிந்துகொள்ள வரைபடம் பெரிதும் உதவியாக அமைகின்றது. வரைபடங்களில் பூகோள, பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் தொடர்பான பல தகவல்கள் உள்ளடங்குகின்றன. அதனால், அன்றாட வாழ்வில் பல்வேறு தேவைகளுக்காக, வரைபடங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

## பக்கபலமாக அமையும் வரைபடங்கள்

இளம்பருவத்தில் முக்கிய செயற்பாடாக அமைவது பாடசாலைக்குச் செல்வதாகும். அதன் காரணமாகவே, எமக்கு பாடசாலை வீடு, உள்ளிட்ட சில பிரதேசங்கள் பற்றி ஓரளவு அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. ஆனாலும், எப்போதும் ஒரே இடத்தில் இல்லாமல் நாம் வாழும் பிரதேசத்தை விட்டு, வெளிப்பிரதேசத்திற்கு சுற்றுலா செல்லும் நிலைமைகளும் ஏற்படுவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் செல்லும் பகுதிகள் பற்றிய முழுமையான அறிவு எமக்கு இல்லாமல் இருக்கலாம். இத்தகைய நிலைகளில் சரியான தீர்வு கிடைப்பது வரைபடங்கள் மூலமேயாகும். சுற்றுலாவைத் திட்டமிட முன்னர் நாம் செல்லக்கூடிய பகுதிகள், பிரதேசங்கள் தொடர்பாக, பூரண அறிவைப் பெற முன்கூட்டியே வரைபடம் ஒன்றை எடுத்து அதுபற்றிய போதிய அறிவினையும் தெளிவினையும் பெற்றுக் கொள்ள வேண்டும். பயணிக்க வேண்டிய பிரதேசத்தில் உள்ள கட்டடங்கள், பாதைகள், முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், காடுகள், இயற்கை சுவாத்திய நிலை, காலநிலை பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள வரைபடங்கள் துணைபுரிகின்றன. வரைபடமொன்று எம்மிடம் இருக்கும் சந்தர்ப்பத்தில் பிரயாணத்தை வெகு இலகுவாக மேற்கொள்ள முடிவதோடு, நேர விரயத்தையும் தடுக்க முடிகின்றது.

## வரைபடங்கள் முக்கியத்துவம் பெறும் வேறு சந்தர்ப்பங்கள்

சுற்றுலாக்களின்போது மட்டும் வரைபடம் முக்கியத்துவம் பெறுவதில்லை. போக்குவரத்துப் பாதைகள், நீர், மின்சாரம், தொலைத்தொடர்பு வேலைகள் போன்ற அடிப்படை வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்தவும் வரைபடங்கள் உபயோகமாகின்றன. இதற்கு மேலதிகமாக கல்வி, சுகாதாரம், வங்கி, நீதி சேவைகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் வரைபடங்கள் பயன்படுகின்றன. குறிப்பிட்ட பிரதேசத்தில் அபிவிருத்தியில் பின்னடைந்த பகுதிகளை அடையாளம் கண்டு அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிடவும் வரைபடங்கள் பயன்படுகின்றன. அத்துடன், ஒரு நாட்டின் பாதுகாப்பைத் திட்டமிடுவதிலும் எல்லைகளை நிர்ணயிப்பதிலும் வரைபடங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.




## காட்சிப்படத்தை வரைபடத்தில் காட்டுதல்

இங்கு தரப்பட்டுள்ள புகைப்படத்தைக் கருதிக் கொள்ளுங்கள். அந்தப் படத்திற்கமைய, இரண்டாவதாக காட்டப்பட்டிருப்பது, புவியியல் ரீதியாக முக்கியத்துவம் பெறும் வகையிலான வரைபடமாகும். இங்கு இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் புகைப்படம் மற்றும் வரைபடத்தில் உள்ள வேறுபாட்டை நீங்கள் காண்பீர்கள். வரைபடம் புகைப்படத்தைப் போன்று பல நிறங்களில் காணப்படுவதில்லை. எனினும், புகைப் படத்தில் உள்ள வைத்தியசாலை, பாடசாலைம், ஆலயம், தபாற்கந்தோர் என்பன வரைபடத்தில் குறியீடுகள், அடையாளங்கள்மூலம் குறித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. வயல்வெளி, காடுகள், வீட்டுத் தோட்டம், நீர்நிலைகள் என்பன நிறங்களால் குறித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

## வரைபடம் ஒன்றைத் தயாரிக்கும் முறை

ஒரு வரைபடத்தில் முக்கியமாக திசை காட்டப்படுதல் வேண்டும். ஆனால், புகைப்படத்தில் திசை காட்டப்படுவதில்லை. வரைபடத்தில் திசை வடக்குத் திசையாக காட்டப்பட்டிருக்கும். அந்த நிலைக்கு ஏற்ப வரைபடத்தில் உள்ள ஏனைய நிலைகளை அடையாளம் காண முடியும். இந்த வரைபடத்தில் வடக்கு எல்லையில் காடும், கிழக்காக ஆலயமும், தெற்கில் வீட்டுத் தோட்டமும், மேற்காக வைத்தியசாலையும் அமைந்துள்ளதோடு, பாடசாலை தென்கிழக்கிலும், வடமேற்கில் மலையும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஆறும் அமைந்திருக்கின்றன.

திசை போன்று அளவும் வரைபடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. புவியின் மேற்பரப்பில் உள்ள அளவுகளை அந்த அளவுக்கு ஏற்பவும் வரைபடத்தில் 'குறித்துக்காட்ட முடியும். பரந்தளவில் உள்ள பகுதிகள் சிறிதாகக் காட்டப்படுவதுண்டு. பொதுவாக, வரைபடமொன்றில் சிறிய பிரதேசங்களில் 2 மீற்றர் அளவைக் குறிக்க 1 செ.மீற்றர் என குறிக்கப்படுகின்றது. பிரதேசத்தின் பரப்பளவிற்கேற்ப, வரைபடத்தில் உள்ள அளவீடுகளும் வேறுபடும். அதற்கு ஏற்ப ஊர், நகரம், பிரதேசம் என்ற அடிப்படையில் வரைபடத்தில் குறிக்கப்படுவது வழக்கமாகும்.

திசை மற்றும் அளவீட்டுக்கு மேலதிகமாக, நிர்மாணிக்கப்படுகின்ற வரைபடமொன்றில் அந்த வரைபடம் எதனைக் காட்டுகின்றது என்பதை அறிந்துகொள்ளக் கருப்பொருளாக தலைப்பொன்று இடப்படுவது முக்கியமானதாகும். குறிப்பிட்ட வரைபடம் காட்டும் பிரதேசத்தின் அமைவிடமும் குறிக்கப்படுதல் வேண்டும். அத்துடன், அடையாளங்கள், எழுத்துக்குறியீடுகள், நிறங்கள் போன்றனவும் வரைபடத்தில் பயன்படுத்தப்படுகின்றன. வரைபடத்தில் அடையாளங்கள் எதனைக் குறிக்கின்றன என்ற சுருக்க விளக்கமும் முக்கியமானதாகும். குறியீடுகள் காட்டும் விடயங்கள் என்ன என்பதை தனியாக குறித்துக்காட்டுவதற்காகவே, இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. வரைபடம் ஒன்றின் முக்கியத்துவத்தை அறிந்துகொண்ட நீங்கள் இப்போது உங்கள் பிரதேசத்தை, கிராமத்தை, பாடசாலையை அல்லது நகரத்தின் அமைவை வரைபடம் மூலம் காட்ட முயற்சி செய்யலாம். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கவலையைப் போக்கி கற்றலில் முன்னேறுங்கள்




துன்பமும் இன்பமும் வாழ்க்கையில் மாறி மாறி இடம்பெறும் நிகழ்வுகளாகும். இன்பம் ஏற்பட்டால் அதில் அதிகமாகத் திளைத்திருப்பதும் துன்பம் ஏற்படின் அதனையிட்டு அதிகமாக வருந்துவதும் எமது உள்ளத்தை மட்டுமன்றி, கற்றலையும் உடலையும் வாழ்க்கையையும் பாதிக்கும் காரணிகளாக அமைந்துவிடுகின்றது. இத்தகைய சூழ்நிலைக்கு வழிவிடாமல் எதனையும் எமது முயற்சிக்கான மூலதனமாக மாற்றி, வாழ்க்கையில் சாதனைகள் பல புரிந்திட மாணவர்கள் மன உறுதியோடு முயற்சிக்க வேண்டும்.

கவலையானது, அச்சத்தையும் பதற்றத்தையும் விரக்தியையும் தர வல்லது. இவ்வாறான சக்திகள் முயற்சியை தளரச் செய்யும் திறன் கொண்டவை என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சிலர் கவலை ஏற்பட்டால் தனிமையை விரும்புவார்கள். இத்தகைய, தனிமையின்மூலம் சாதாரண கவலைகள்கூட மனதில் பதிந்து, என்றும் ஆறாத மன அழுத்தத்தை உருவாக்கிவிடும். ஆகவே, கவலை ஏற்பட்டால் அதனைக் குறைக்கும் முகமாகவும் அதற்குத் தீர்வு காணும் முகமாகவும் அதனைத் தவிர்க்கும் முகமாகவும் எமது நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் அக்கவலை பற்றிப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.



## கல்வி முகாமைத்துவம் - 78

### கற்றலுக்கான ஆலோசனைகள்

தேவையின்றி அதிகமாக மனக் கவலை கொள்வதன்மூலம் உடல் உபாதைகள் ஏற்படவும் கூடும். இதனால், எந்தவொரு செயற்பாட்டிலும் உரிய கவனம் செலுத்த முடியாமல் போகும். அதாவது, எம்மைப் பற்றியும் எம்மைச் சுற்றி உள்ளவற்றைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ள முடியாத ஜடமாகிப் போய்விடக் கூடும். இந்நிலை மிகவும் ஆபத்தை விளைவிக்கக்கூடியது.

கவலை ஏற்பட முன்னரும் ஏற்பட்ட பின்னரும் மனதைத் திடமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆக, மன உறுதியின் மூலமே இவ்வாறான கவலைகளை இலகுவாக வெற்றிகொள்ள முடியும்.

கவலை ஏற்படுவது இயற்கையானது. அதனை மாற்ற முடியாது. ஆனால், குறைத்துக்கொள்ள முடியும். அதனைக் குறைக்க மற்றவர்களால் முடியாது. மாறாக, கவலை அடைபவர்களாலேயே தமது கவலையைக் குறைக்க முடியும். அதன்படி, சுறுசுறுப்பாக இயங்குவதன் மூலமும் சுவாசப் பயிற்சி, தூக்கம், வாய்விட்டுப் பேசல் போன்றவற்றின் மூலமும் கவலையை அகற்றலாம்.

அத்துடன், கல்வி கற்கும்போது, கவலையில் மனதை ஒருங்கிணைக்காமல் அதனைக் கலைத்து எமது நேரத்தையும் முயற்சியையும் பயனுறுதிமிக்கதாக மாற்ற உழைக்க வேண்டும். அப்போது, கவலைகள் தன்னால் ஓடிவிடும். (தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

## கவலைப்படுவதால் ஏற்படக்கூடிய உடல் உபாதைகள்



கவலை கொள்வதால் விரக்தி, அமைதி இன்மை, மனச் சோர்வு, கவனம் இன்மை, வெறுப்பு, பயம், நரம்புத் தளர்ச்சி, தலைவலி, பதற்றம், உடல் வலி, மயக்கம், அதிக இதயத் துடிப்பு போன்ற அபாயகரமான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இவை கல்வியை பாதிப்படையச் செய்யக்கூடியவை. இவற்றின் தாக்கம் அதிகரித்தால் அதிலிருந்து மீள்வது கடினம்.

# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எஸ்.ரூபிகா, 176 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், செல்வராஜ்-கயல்விழி தம்பதியரின் புதல்வியாவார்.



களு/ஜீலான் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் ஏ.எஸ்.ஸல்மா, 172 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் ஸலாம்-ருஸ்தியா தம்பதியரின் புதல்வியாவார்.



ச.கீர்த்தனா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய மாணவியான இவர், சந்திரகுமார்-தவமணி தம்பதியரின் புதல்வியாவார்.



கமு/அல்-மனார் மத்திய கல்லூரி மாணவரான எம்.ஸப்கத், 173 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அமீர்-முபீனா தம்பதியரின் புதல்வராவார்.



ஹதிரவலான முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எஃப்.நஹ்லா, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நஸார்-தனூஜா தம்பதியரின் புதல்வியாவார்.



கெலிஒய அஸ்-ஸிராஜ் ஆண்கள் வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.ஸப்வான், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பதுர்தீன்-நிஹாரா தம்பதியரின் புதல்வராவார்.



மன்/சிறுக்கண்டல் றோ.க.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் அ.அமல்றொய்ஷன், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.ஸஹ்ரா, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களு/அல்-பாஸியதுல் நஸ்ரியா மு.ம.ம.வித்தியாலய மாணவியான இவர், மன்ஸூர்-ஸாபிரா தம்பதியரின் புதல்வியாவார்.



கிளி/பளை மத்திய கல்லூரியில் இருந்து சித்தியடைந்த மாணவர்களான (இ.வ) பா.மேனன் (166 புள்ளிகள்), ம.சாருஜா (161 புள்ளிகள்), ஜெ.திவாகர் (177 புள்ளிகள்), க.அனுஷா (167 புள்ளிகள்), ம.கஜீபன் (151 புள்ளிகள்), இ.வினுஜா (162 புள்ளிகள்) ஆகியோர் தமது ஆசிரியர் இந்திராணி நித்தியானந்தராஜாவுடன் காணப்படுகின்றனர்.



அக்குறனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் மாணவியான எஃப்.ஸிஹ்ரா, 167 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரிஸ்வான்-சீனா தம்பதியரின் புதல்வியாவார்.



அ.மயூரி, 181 புள்ளிகளைப் பெற்றுள்ளார். யாழ்ப்பாணக் கல்லூரி மாணவியான இவர், அருள்மாறன்-கலைவாணி தம்பதியரின் புதல்வியாவார்.



யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பி.கபீனா, 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பிறேமராஜ்குமார்-பிருந்தா தம்பதியரின் புதல்வியாவார்.



யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய மாணவி ச.தர்சிகா, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சசிகுமார்-விமலேஸ்வரி தம்பதியரின் புதல்வியாவார்.




பொத்துவில் அல்-இர்பான் மகளிர் கல்லூரி மாணவி றுகையா,175 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அனஸ்-சலீமா பீவி தம்பதியரின் புதல்வியாவார்.



க/மதீனா தேசிய கல்லூரியில் கல்வி பயிலும் எம்.நாசிக், 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நசீர்-ஜெஸ்மினா தம்பதியரின் புதல்வராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலன் ச
# சமூக சேவை



பாடசாலை சீருடை முழுவதும் அழுக்கடைந்த நிலையில் பாலா, வீடு திரும்பினான்.

''என்ன மகனே. உனது உடை இப்படி அழுக்காக இருக்கிறது. பாடசாலைக்குச் சென்று என்னதான் செய்தாய்?'' அம்மா கோபத்துடன் வினவினார்.

''இன்று எங்களது பாடசாலையில் சிரமதான நிகழ்வொன்று நடைபெற்றது. அதனால்தான் இப்படியாகிவிட்டது அம்மா'' என்றான் பாலா.

''ஆ..... உண்மையாகவா? இது பற்றி என் நேற்று சொல்லவில்லை?'' அம்மா மீண்டும் சிறிது கோபப்பட்டார்.

''இல்லை. அம்மா திடீரென விரைவாக வகுப்பறைகளை சுத்தம் செய்தோம். ஆனாலும், பாருங்களேன் அம்மா சிலர் அதில் ஈடுபடாமல் தவிர்த்து விட்டனர்?'' பாலா அவ்வாறு கூறும்போது அவன் முகம் கோபத்தினால் மாறியிருந்தது.


''உண்மையாகவா மகனே? அவர்களைப் பார்த்து ஆசிரியர் என்ன கூறினார்?'' என அம்மா வினவினார்.

''இவ்வாறு பொது வேலைகளில் ஈடுபடுவதன் அவசியம் பற்றி ஆசிரியர் அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

''இது பற்றி மகன் என்ன கற்றீர்கள்? இது பற்றி ஆசிரியர் விளக்கமளித்தாரா?''

''ஆமாம் அம்மா. ஆசிரியர் பொதுநலன் சார்ந்த வேலைகளில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி எங்களுக்கு சொல்லிக் கொடுத்தார்''.





## பொது வேலைகள் என்றால் என்ன?

முழு சமூகத்திற்கு நன்மை பயக்கும் ஒரு செயலையே நாம் 'பொது வேலை' என்கிறோம். இது மனித மனதில் தோன்றும் ஓர் உயர்வான எண்ணமாகும். சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல், வீதிகளை உருவாக்கல், மத வழிபாட்டுத் தலங்களை சுத்தம் செய்தல், சிரமதானங்களை நடத்துதல், பாடசாலை வகுப்பறைகளை சுத்தம் செய்தல் மற்றும் வேறு பல பொது வேலைகளும் இதில் அடங்கும்.

## வரலாற்று அடிப்படை

மனித சமூகம் தோன்றிய நாள் முதல் பொதுநலன் சார்ந்த வேலைகளில் ஈடுபடுதல் என்பது நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. மனிதன் ஒரு சமூக விலங்கு. இதனால், அவன் தனித்தியங்க முடிவதில்லை. அவன் ஆதிகாலம் முதல் அதாவது, பண்டைய காலம் தொட்டே கூட்டாக இயங்கி வரும் பழக்கத்தினைக் கொண்டவனாக இருக்கின்றான்.

அதற்கமைவாக, மனிதன் கற்காலத்தில் ஒரு குழுவாக இணைந்து வேட்டையாடியிருக்கின்றான். தாம் வேட்டையாடிய உணவினை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்டு ஒரே சூழலில் ஒன்றாகவே வசித்து வந்துள்ளான். பரம்பரை பரம்பரையாக இப்பழக்கம் தொடர்ந்து வந்துள்ளது. தற்கால மனிதர்கள் மத்தியிலும் இத்தகைய பழக்கவழக்கம் பிரதிபலிக்கின்றமையைக் காண முடிகின்றது.

## பொது வேலைகளை செய்வதனால் ஏற்படும் நன்மைகள்

பொது வேலைகளில் அடிக்கடி ஈடுபடுவதன்மூலம் ஒருவர் தனிப்பட்ட நலன் மற்றும் சமூகநலன் எனும் இரு நன்மைகளை அடைகின்றார்.

**தனிப்பட்ட நலன்:**

ஒருவர் பொது வேலைகளில், பொதுச் செயல்களில் ஈடுபடும்போது, அவருக்குக் கிடைக்கும் விசேட நலன்கள் பல உண்டு. அவை;

- சமூகத்தில் அறியப்பட்ட நபராகுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்ந்த
# கள்



* சமூக அந்தஸ்து கிட்டுதல்.
* புகழ் மற்றும் பாராட்டுக்கள் கிடைத்தல்.
* மற்றவர்களின் அன்பும், விசேட கவனமும் கிட்டுதல்.
* சுயநலன் நீங்கி பொதுநலன் சார்ந்த உணர்வு ஏற்படுதல்.
* மனதில் இரக்க உணர்ச்சி ஏற்படுதல்.
* அந்த நபரின் ஆளுமை அதிகரித்தல்.
* இவ்வாறானவர்களுக்கு தலைமைத்துவம் கிடைத்தல்.
* சமூகத்தில் ஓர் உயர்ந்த நிலையை அடைதல்.

**சமூக நலன்கள்:**

* ஒரு தனி நபரோ அல்லது குழுவோ பொது வேலைகளில் ஈடுபடும்போது. அது சமூகத்தினை நல்வழிப்படுத்த உதவுகின்றது. இதனால், சமூகம் பல நன்மைகளை எய்தும்.
* இது சமூக இருப்புக்கு அவசியமாகும்.
* பொது வேலைகளில் ஈடுபடும்போது, நிறுவனத்திற்கும் அரசாங்கத்திற்கும் நன்மைகள் பல கிடைக்கும்.
* பாடசாலை எனின், முன்னேற்றம் மெருகேறும். குறித்த பாடசாலைக்கு நன்மதிப்புக் கிடைக்கும்.
* இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் பாடசாலைக்கு ஓர் உயர்ந்த அந்தஸ்து கிடைக்கின்றது. கலாசாரப் பாதுகாப்பு கிட்டுகின்றது.
* நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பொது வேலைகளில் ஈடுபடுவதனால் செலவுகள் குறைவடைகின்றன.
* சமூகப் பிணைப்பினை உறுதிப்படுத்த முடிகின்றது.
* எதிர்பாராத அனர்த்தங்களின்போது, ஒன்றாக இணைந்து செயற்படுவதனால், அவ்வாறான சூழ்நிலைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிகின்றது.

## பெற்றோரின் முன்னுதாரணம்

சமூகத்தின் மீது பற்று ஏற்படுவது கிரமமாக நடைபெற வேண்டிய ஒன்றாகும். சிறு வயது முதல் சமூகத்தின்மீது நன்மதிப்பு ஏற்பட்டு விடுகின்றது. அதே போன்று, பொது வேலைகள் தொடர்பான ஆர்வம் இளம் வயதிலேயே துளிர்விட ஆரம்பித்து விடுகின்றது. சிறுவயதின் உளவியல் பதிவுகள் வளர்ந்த பின்னர் செயற்பாடாக மாறிவிடுகின்றது. இதனால், சிறு வயதில் இருந்தே சிறுவர் சிறுமிகளை பொது வேலைகளில் ஈடுபடுத்தல் வேண்டும். பெற்றோர்கள் பொது வேலைகளில் காட்டும் ஆர்வம் பிள்ளைகளையும் ஈர்க்கின்றது. இதுபற்றி உளவியல் அறிஞர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். பெற்றோர்கள் இவ்வாறான விடயங்களின்மீது ஆர்வம் காட்டாத பட்சத்தில் பிள்ளைகளிடமும் ஆர்வம் குன்றி விடுகின்றது. தனித்து செயற்பட, சுயநலமான செயல்களில் ஈடுபட, பிள்ளைகள் முயற்சிக்கின்றனர். வளர்ந்த பின்னர் பிள்ளைகளிடமும் இதே நடைமுறையைக் காணக் கூடியதாக உள்ளது.



## பிரதானமான பலதரப்பட்ட நோக்கங்கள்

பெரும்பாலானவர்கள் பல்வேறு குறிக்கோள்களை பிரதானப்படுத்தியே பொது வேலைகளில் ஈடுபடுகின்றனர். அவற்றை இவ்வாறு இனங்காண முடியும்.

* சமூகத்தில் ஓர் அடையாளத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
* பொது வேலைகளை ஒரு சமூகக் கடமையாகக் கருதுதல்.
* தனிப்பட்ட எதிர்பார்ப்புகள்.
* புண்ணியம் தேடும் செயற்பாடு என்ற எண்ணம்.
* வாழ்வின் ஓர் அங்கமாகக் கருதுதல்.
* நாகரிகமாகக் கருதுதல்.

## முன்னுதாரணம் அவசியமாகும்

சிறுபிள்ளைகளான நீங்கள் இவ்வாறான பொது வேலைகளில் ஈடுபடுவதற்கு முன்பு பெற்றோர்களின் முன்னுதாரணத்தைப் பெறுவது அவசியமாகும். அவர்களிடமிருந்து பெறும் பண்புகள் மிகவும் முக்கியமானவையாகும். இப்பண்புகளும் குணநலன்களும் பரம்பரை பரம்பரையாகத் தொடரக் கூடியது. இன்று நிலவும் போட்டித்தன்மை வாய்ந்த உலகில் இவ்வாறான பொதுநலன் சார்ந்த



விடயங்களில் இருந்து விலகியிருக்க வேண்டிய சந்தர்ப்பங்களே அதிகம் உள்ளன.

## தனிமைப்படும் அபாயம்

தனித்து வாழ்தல் என்பது எவராலும் முடியாத விடயமாகும். குறிப்பாக, பிள்ளைகளால் இது இயலாத காரியமாகும். பிள்ளைகள் தனிமைப்படுத்தப்படும்பொழுது பல்வேறு உளவியல் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அவ்வாறான பிள்ளைகளின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கும். எவ்வளவுதான் படிப்பறிவு கொண்டவராக இருந்தாலும் சமூகத்தின் அன்பு அவருக்குக் கிட்டாது. யார் ஒருவர் சமூகத்திலிருந்து விலகியிருக்கின்றாரோ அந்தளவுக்கு சமூகமும் அவரிடம் இருந்து விலகியே இருக்கும். அவருக்கு உதவவும் முன்வராது.

## உதாரணக் கதையொன்று

ஒரு கிராமத்தில் பாலா மாமா என்று அழைக்கப்படும் ஒருவர் வசித்து வந்தார். இவர் வசித்து வந்த வீட்டிற்குச் செல்லும் பாதை வெட்டவெளியான பாதையாகும். நிழலுக்கு ஒரு மரம்கூட அப்பாதையோரத்தில் இல்லை. அன்றாடம் வேலைக்குச் செல்லும் பாலா மாமா சிறிது சிந்தித்துப் பார்த்தார். மறுநாள் பாதையின் இரு மருங்கிலும் குழிகளைத் தோண்டி அதில் பலதரப்பட்ட மரங்களையும் செடிகளையும் நாட்டினார். காலை, மாலை என இரு வேளையும் அதற்கு நீர் ஊற்றினார். உரம் இட்டார். பாதுகாப்பாக வளர்த்தார். இதனைப் பார்த்த பலர் அவரைக் கேலி செய்து பேசினர். அவரை வேடிக்கையான மனிதர் என்றனர். ஆனால், அவரோ அவை எதனையும் பொருட்படுத்தவில்லை. தனது வேலையில் மும்முரமாக இருந்தார்.

ஒரு சில நாட்கள் கழிந்தன. பாலா மாமா வைத்த மரக்கன்றுகள் உயரமாக வளர்ந்திருந்தன. அவை அனைவருக்கும் நிழலை அளித்தன. மாமாவைக் கேலி செய்தவர்கள் அவரின் இந்த தன்னலம் பாராத சேவையைப் பார்த்து மனம் மகிழ்ந்தனர். அவரைப் பார்த்துச் சிரித்தோர் அனைவரும் மனம் வருந்தினர். அத்துடன், அவர்கள் அனைவரும் தமது சுற்றுப்புறங்களை-சுத்தமாகவும் காற்றோட்டமாகவும் வைத்துக்கொள்ளப் பழகினர். மேலும், வாரவாரம் அனைவரும் இணைந்து சிரமதானங்களை மேற்கொண்டனர். பாலா மாமாவின் சுயநலம் பாராத பொதுச் செயலால் ஊர் மக்கள் அனைவரும் அவரை வாழ்த்தினர். அவரைப் பின்பற்றி அனைவரும் வாழ ஆரம்பித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் ஒரு நாடு

# ஈக்வடோர்



தலைநகரின் ஒரு பகுதி

**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட பல கட்சிக் குடியரசு.

**சுதந்திரம்:** சுதந்திரப் பிரகடனம் - 1809 ஒகஸ்ட் 10. ஸ்பெய்னிடமிருந்து - 1822 மே 24. ரேட்டர் கொலம்பியாவிடமிருந்து - 1830 மே 13. ஸ்பெய்னால் அங்கீகரிக்கப்பட்டது-1830 பெப்ரவரி 16.

**தேசிய பெயர்:** ரிபப்ளிக்கா டெல் ஈக்வடோர்.

**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய ஒகஸ்ட் 10.

**ஜனாதிபதி** (2007): ரஃபேல் கொரேயா.

**உப ஜனாதிபதி** (2007): லெனின் மெரேனோ.

## புவியியல்

ஈக்வடோர் தென் அமெரிக்காவின் வடமேற்கில் அமைந்துள்ளது. இதன் வடக்கில் கொலம்பியாவும் கிழக்கு மற்றும் தெற்கில் பேரு நாடும் எல்லைகளாக அமைந்துள்ளன. வடக்கு-தெற்காக அந்தீஸ் மலைத் தொடர்கள் இந்நாட்டை ஊடறுத்துச் செல்கின்றன. அத்தோடு, உலகின் உயரமான எரிமலைகளும் இங்கு காணப்படுகின்றன. தென் அமெரிக்க பெரு நிலப்பரப்பில் இருந்து மேற்காக அமைந்துள்ள கெலபாகொஸ் தீவுகள் 1832 இல் ஈக்வடோர் நாட்டுடன் இணைக்கப்பட்டன. பெரும்பாலான ஆறுகள் அந்தீஸ் மலையில் உற்பத்தியாகி கிழக்கே அமேசன் நதியுடன் இணைகின்றன. மேலும் சில நதிகள் அந்தீஸ் மலையில் உற்பத்தியாகி மேற்கே பசுபிக் கடலில் சங்கமமாகின்றன. பபஹோயோ, சிரா, கொகா, குராரே, டாயுல், எஸ்மெரால்டஸ், கயாஸ், நாப்போ, பஸ்டாஸா,



புட்டு மாயோ என்பன குறிப்பிடத்தக்க நதிகளாகும்.

**மொத்தப்பரப்பு:** 109,483 ச.மைல் (283,560 ச.கி.மீற்றர்).

**மொத்த நிலப்பரப்பு:** 106,888 ச.மைல் (276,840 ச.கி.மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 22 மாகாணங்கள்.



தேசிய இலச்சினை

**தலைநகர்:** க்விட்டோ.

**பெரிய நகரம்:** க்வாய்க்கின்.

**உயர் மலைச்சிகரம்:** ச்சிம்பொராஸோ-6,267 மீற்றர்.

**தாழ்மையம்:** பசுபிக் சமுத்திரம்.

**மக்கள் தொகை** (2011): 15,007, 343.

**நாணயம்:** அமெரிக்க டொலர்.

**மொழிகள்:** ஸ்பெனிஷ் (உத்தியோகபூர்வ மொழி), க்விச்சுவா, ஏனைய அமெரிந்தியன் மொழிகள்.

**இனக்குழுவினர்கள்:** மெஸ்டிஸோ 65%, அமெரிந்தியன் 25%, ஸ்பானியரும் ஏனைய ஐரோப்பியரும் 7%, கறுப்பின மக்கள் 3%.

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கம் 95%.

**எழுத்தறிவு:** 93%.

**இணையத்தளக் குறியீடு:** .ec

**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +593

**தேசிய கீதம்**

Salve, Oh Patria, mil veces!
¡Oh Patria,
gloria a ti! ¡Gloria a ti!
Ya tu pecho, tu pecho,
rebosa
Gozo y paz ya tu pecho
rebosa;..... என

ஆரம்பமாகின்றது.

## வரலாறு

ஜனாதிபதி



உப ஜனாதிபதி



ஈக்வடோரின் உயர் மலைப்பிரதேசங்களில் க்விட்டோ பேரரசு கி.பி.1000 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்பானிய நாடுகாண் பயணியான பிரான்ஸிஸ் கோபிஸாரோ, 1532 இல் இப்பிரதேசத்தைக் கண்டுபிடித்தார். பின்னர் இந்தியர்களை தோற்கடித்து ஸ்பானிய ஆட்சி நிறுவப்பட்டது. 1819 இல் வெனிசுவெலா, கொலம்பியா, பனாமா உள்ளிடங்கிய 'கிரேட்டர் கொலம்பியா' பேரரசில் ஈக்வடோரும் இணைக்கப்பட்டது.

1830 இல் கிரேட்டர் கொலம்பியாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உருவான மூன்று நாடுகளில் ஈக்வடோரும் ஒன்று. 1904 மற்றும் 1942 க்கு இடைப்பட்ட காலகட்டங்களில் அண்டை நாடுகளுடனான மோதலில் நாட்டின் சில பகுதிகளை இழந்தது. 1970 களில் சிறிது காலம் ராணுவ ஆட்சி நிலவியது. அதன் பின்னர் மீண்டும் மக்களாட்சி மலர்ந்தது. 1995 இல் ஆரம்பமான பேரு நாட்டுடனான எல்லைப்போர், 1999 இல் முடிவுக்கு வந்தது. எனினும், 1996 முதல் 2004 வரையிலான காலகட்டங்களில் நிலையற்ற அரசியல் நிலையே இருந்தது. இந்த எட்டு வருடங்களில் ஏழு ஜனாதிபதிகள் வரை ஆட்சி செய்துள்ளனர்.










கரொன்டெலெட் மாளிகை (ஈக்வடோர் அரசாங்கத்தின் முக்கிய காரியாலய வளாகம்)

## கலாசாரம்

ஸ்பானிய மொழிபேசும் மெஸ்டிஸோ மக்கள் நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையினராக வாழ்வதால், அந்த இனத்தின் கலாசாரம் நாட்டில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. மிகவும் தொன்மையான பாரம்பரிய கலாசார அம்சங்கள் தற்போதும் கடைப்பிடிக்கப்பட்டுகின்றன. ஸ்பானிய குடியேற்றத்தின் பின் ஸ்பானிய மொழி, மதம் மற்றும் பழக்கவழக்கங்கள் நாட்டில் பாரிய செல்வாக்கினை செலுத்துகின்றன. நாட்டில் கணிசமான தொகையினராக வாழும் அமெரிண்டியன் மற்றும் கறுப்பின ஆபிரிக்க கலாசாரமும் இங்கு செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம்.



லா மிட்டட் டெல் முன்டோ ஞாபகச்சின்னம்

## காலநிலை

ஈக்வடோரின் கடற்கரை யோரப் பகுதியில் வெப்பமான காலநிலை நிலவுகின்றது. ஆனால், உள்நாட்டின் உயர்மலைப் பிரதேசங்களில் அதிக குளிரான காலநிலை நிலவுகின்றது. அடர்ந்த காடுகள் நிறைந்த சமவெளிகளும் கிழக்குத் தாழ்நிலங்களும் உஷ்ணமானதும் அதிக மழைவீழ்ச்சியும் உள்ள பிரதேசங்களாகும். நாட்டின் உயர்நிலப்பிரதேசங்களில் காலையில் அதிக குளிரும் பகல் வேளைகளில் அதிக வெப்பமும் காணப்படும். அந்தீஸ் மலையின் உச்சத்தில் பனிக்கட்டிகள் படர்ந்திருப்பதோடு, அதிக குளிராகவும் இருக்கும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2009): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 2 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிகள்: 13.6 மில்லியன்.

இட்ச்சிம்பியா கலாசார மையம்




**வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்**(2001): AM 392, FM 35, SW 29. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 7. **இணையத்தள வழங்குனர்கள்** (2010): 67,975; இணையத்தளப் பாவனையாளர்கள்: 3.4 மில்லியன். -

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2010): மொத்த நீளம் 965 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2006): மொத்தம் 43,670 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2010): 1500 கி.மீற்றர். **துறையும் துறைமுகங்களும்:** எஸ்மெரால்டாஸ், க்வாய்க்கின், லா லிபர்டட், மெண்ட்டா, போர்ட்டோ பொலிவர். **விமான நிலையங்கள்** (2010): 428.

## பொருளாதாரம்

**விவசாயம்**(பயிர்ச்செய்கை நிலம் -6%): வாழை, கோப்பி, கொக்கோ, நெல், கிழங்குவகைகள், கரும்பு, மாட்டுப்பண்ணை, செம்மறி ஆடுகள், பன்றிகள். **கைத்தொழில்கள்:** பெற்றோலியம், உணவு உற்பத்திப் பொருட்கள், புடவை, மர உற்பத்திகள், ரசாயனப்பொருட்கள். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், மீன், மரங்கள். **ஏற்றுமதிகள்** (2010): பெற்றோலியம், வாழை, பூக்கள், கணவாய். **இறக்குமதிகள்** (2010): வாகனங்கள், மருந்து உற்பத்திகள், தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஐக்கிய அமெரிக்கா, பேரு, இத்தாலி, கொலம்பியா, பிரேசில், சிலி, பனாமா.







ச்சிம்பொராஸோ எரிமலை (உயர் சிகரம்)

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- ச்சிம்பொராஸோ எரிமலை
- லா மிட்டட் டெல் முன்டோ ஞாபகச்சின்னம்
- கெலபாகொஸ் தீவுகள்
- பெல்லாவிஸ்டா க்ளவுட் பொரெஸ்ட்
- மேல்கொன் 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்து இருள் அகற்றி வாழ்வை வளமாக்கும்

# தீபத்திருநாள்



தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து வணங்குதலே தீபத்திருநாள் எனப்படுகின்றது. தீபம் என்பது வெளிச்சத்தைக் குறிக்கின்றது. ஆவளி என்றால் வரிசையாகும். தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து வழிபடுவதே தீபாவளியாகும். ஒவ்வொருவருடைய மனதிலும் ஏதாவது ஓர் இருள் இருந்துகொண்டே இருக்கும். அத்தகைய இருளாகிய; அகங்காரம், பொறாமை, தலைக்கனம் போன்ற துர்க்குணங்களை இந்நாளில் எரித்து உள்ளத்தை தூய்மைப்படுத்த வேண்டும் என்பதே இத்திருநாளின் நோக்கமாகும். தீபத்தில் பரமாத்மாவும் நெருப்பில் ஜீவாத்மாவும் இணைந்து அருள் தருவதாக ஜதீகம். நம் ஒவ்வொருவர் மனதிலும் எம்மை அறியாமல் ஆட்சிசெய்கின்ற தீயகுணங்களை அழித்துவிட வேண்டும். அவற்றை தீபத்தில் எரித்து வாழ்வை ஒளிப்பிறக்கச் செய்தல் வேண்டும் என்பதே தீபத்திருநாளின் முக்கியத்துவமாகும்.

அந்தவகையில், ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் சதுர்தசியும் அமாவாசையும் இணையும் தினமே தீபாவளித் திருநாளாகும். ஐப்பசி மாதம் சதுர்தசி திதியும் அமாவாசையும் இணைந்த வேளையில்தான் 'நரகாசுர வதம்' நிகழ்ந்ததாகவும் அந்நாளில்தான் தீபாவளி கொண்டாடப்பட வேண்டும் எனவும் புராணங்கள் கூறுகின்றன. அவ்வாறே, இவ்வருடமும் ஐப்பசி ஒன்பதாம் திகதி அதாவது, ஒக்டோபர் 26 ஆம் திகதி புதன்கிழமையே தீபாவளித் திருநாள் கொண்டாடப்படுகின்றது.



தீபாவளி கொண்டாடுவதற்கான முக்கிய காரணமாக அமைவது, 'நரகாசுர வதம்' ஆகும். இதுவே, கிருஷ்ண அவதாரத்தின் முக்கிய நோக்கம் எனவும் கொள்ளப்படுகின்றது. உலகின் தீய சக்தியாக விளங்கிய நரகாசுரனை வதம் புரிந்த, கிருஷ்ணபரமாத்மா, மனம் திருந்திய அத்தீயவனின் இறுதிக்கோரிக்கையை ஏற்று அதன்படி, அவன் வதம் செய்யப்பட்ட நாளை தீபாவளித் திருநாளாக மானிடர்கள் அனைவரும் கொண்டாடி மகிழும்படி வரமளித்தார். அதன் பின்னர், கிருஷ்ணபரமாத்மா தனது சகோதரியின் இல்லத்திற்கு சென்ற பொழுது அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பளித்து இனிப்பு வழங்கி உபசரிக்கப்பட்டார். இதனாலேயே தீபாவளித் தினத்தன்று உறவினர்கள் மற்றும் அயலவர்களுக்கு இனிப்பு வழங்கும் வழக்கமும் தோன்றியதெனலாம்.

தீபாவளித் திருநாளன்று எண்ணெய் தேய்த்துக் குளிப்பது தொன்றுதொட்டுத் தொடர்ந்து வரும் ஜதீகமாகும். பொதுவாக, இவ்வாறு எண்ணெய் தேய்த்துக் குளித்தலை 'கங்கா ஸ்நானம்' என்று கூறுவர். அதற்கான காரணம் அன்றைய தினம் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதன் மூலம் நாம் தீயகுணங்களை நீங்கி, புனிதமடைகின்றோம் என்பதாகும். மேலும், புத்தாடை புனைந்து ஆலயம் செல்வதும் இனிப்புப் பலகாரங்களை அயலவர்களுக்குக் கொடுத்து மகிழ்வதும் இந்நன்நாளின் சாரம்சமாகும்.

அதுமட்டுமன்றி, நாம் பட்டாசு, மத்தாப்பூ கொளுத்தி மகிழ்வதும் நமது எண்ணங்களை, செயல்களை புனிதப்படுத்துவதற்காகவேயாகும். நமது மனதில் உள்ள தீய எண்ணங்களை பட்டாசு வெடிப்பது போன்று சிதறடித்து விட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.



### நரகாசுரனின் கதை

நரகாசுரன் என்ற அசுரன், தானே பெரியவன் என்ற இறுமாப்பில் மானிடர்களையும் தேவர்களையும் அடிமைப்படுத்தி பல்வேறு விதமான துன்பங்களையும் இடர்களையும் கொடுத்து வந்தான். இவனது கொடுமைகளைத் தாங்கமுடியாத அவர்கள் கிருஷ்ணபரமாத்மாவிடம் சென்று முறையிட்டனர். இதனால், கோபம் கொண்ட கிருஷ்ணபரமாத்மா நரகாசுரனை வதம் செய்தார். அவன் மரணிக்கும்வேளை, தனது பாவங்களை உணர்ந்து மனம் திருந்தி கிருஷ்ணபரமாத்மாவிடம் தம்மை மன்னிக்கும்படி கோரினான். தனது இறப்பை அனைவரும் கொண்டாடி மகிழ வேண்டும் என்றும் அறியாமை எனும் இருளிலிருந்து விடுபட வேண்டும் என்றும் வேண்டி நின்றான். இதற்கிணங்கவே, இந்நாள் தீபாவளித் திருநாளாக அமைந்தது. அந்தவகையில் நரகாசுரன் என்ற இருள் நீங்கி மானிடர்களுக்கும் தேவர்களுக்கும் விடுதலை எனும் ஒளி கிடைத்த திருநாளே தீபாவளித் திருநாள் என்று கூறப்படுகின்றது.



**மேலும், தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவதற்கான பல்வேறு காரணங்கள் பின்வருமாறு:**

* தேவர்களும் அசுரர்களும் பாற்கடலை கடையும்போது, மகாலக்ஷ்மி அங்கு தோன்றியமையால், அந்நாளை அவர்கள் பிறந்த தினமாகக் கொண்டு தீபாவளித் தினம் கொண்டாடப்படுகின்றது.
* மகாபாரதத்தில், பாண்டவர்கள் சூதாட்டநிகழ்வில் கௌரவர்களிடம் தோற்றமையால் 12 வருடங்கள் வனவாசம் சென்றனர். கார்த்திகை அமாவாசை தினத்தன்றே அவர்கள் நாடு திரும்பினர். அந்த நாளே தீபாவளித் திருநாள் எனவும் கூறப்படுகின்றது.



அந்தவகையில், பல்வேறு விதமான வரலாறுகள் இத்தீபாவளித் திருநாளுக்கு இருப்பதாக வரலாறுகள் கூறுகின்றன. எவ்வாறாயினும், இத்தினத்தில் மனதில் உள்ள இருளை அகற்றி, உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்களுடன் இத்தீபத்திருநாளை மகிழ்வுடன் கொண்டாடுவோமாக!

உமா



'அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் - II

பெயர்: .................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01) பின்வரும் பாடலை வாசிக்க.

> இடர் வரும் போதும் - உள்ளம்
> இரங்கிடும் போதும்
> உடன் பிறந்தவர் போல்- மாந்தர்
> உறவு கொள்வர் அப்பா
>
> ஓடும் உதிரத்தில் - வடிந்து
> ஒழுகும் கண்ணீரில்
> தேடிப் பார்த்தாலும் - சாதி
> தெரிவதுண்டோ அப்பா?
>
> நன்மை செய்பவரே - உலகம்
> நாடும் மேற்குலகத்தோர்
> தின்மை செய்பவரே - அண்டித்
> தீண்ட ஒண்ணாதார்.
>
> -தேசிக விநாயகம்பிள்ளை

மேற்குறித்த பாடலைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (v) வரையான வினாக்களுக்கு விடையளிக்க.

i. 'துன்பம்' என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.
.......................................................................

ii. 'கண்ணீர்' என்பதைப் பிரித்து எழுதுக.
.......................................................................

iii. 'உள்ளம் இரங்குதல்' என்பதன் பொருள் யாது?
.......................................................................

iv. உடன் பிறந்தவர் போல் மாந்தர் எப்போது உறவு கொள்வார்?
.......................................................................

v. இப்பாடலில் இடம்பெறும் உயர்திணை பெயர்ச்சொல் யாது?
.......................................................................

02) அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வெற்றிடத்தை நிரப்புக.

i. இந்தப் பூமியைச் சுற்றி..................... மண்டலம் உள்ளது. (வலி, வளி, வழி)
ii. மோகன் தாகந் தீரக் குளிர் ........................ குடித்தான். (பாணம், பாநம், பானம்)

03) i. பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.
சூரியனைக் கண்டதும் தாமரை மலர்கள் மலர்ந்தன.
.......................................................................

ii. பின்வரும் வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.
காற்றில் மரம் அசைந்து ஆடியது.
.......................................................................

04) பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

i. புண்படுத்தல்: .......................................................
ii. நாக்குப் புரளுதல்: .......................................................

05) பின்வரும் தொடர்மொழிக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

i. மற்றவர்களைப் பற்றி அக்கறையில்லாதவன்:......................................
ii. தாய்-தந்தையரை இழந்தவன்: ......................................

06) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

i. கந்தையானாலும் கசக்கிக் கட்டு: ......................................
ii. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு: ......................................

07) தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்களையும் இனங்கண்டு சொல்லுக்குரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

i. யாம் - (தன்மை ஒருமை, முன்னிலைப் பன்மை, தன்மைப் பன்மை)
.......................................................

ii. அது - (படர்க்கை ஒருமை, படர்க்கைப் பன்மை, முன்னிலை ஒருமை)
.......................................................

08) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

செய்வதைக்/துணிப்பொம்மைகள்/ சிவநந்தினி/ கவனித்தாள்/கூர்ந்து
.......................................................................

09) ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

i. ஆசிரியர்: ......................... ii. வைத்தியசாலை: .........................

10) படத்தைப் பார்த்து ஆங்கிலத்தில் அவற்றுக்கு வழங்கப்படும் பெயரை ஆங்கிலத்திலேயே எழுதுக.

i.  ....................

ii.  ....................

11) கருத்தைத் தமிழில் எழுதுக.

i. I am reading a book - .......................................................
ii. Please open your box - .......................................................

12) i. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

நாங்கள் சாப்பிடுவோம்: .......................................................

ii. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

(அ) அய்யா கடே(ட்)ட் (G)கியா: .......................................................
(ஆ) மம பாடம் கறனவா : .......................................................

★ *13 தொடக்கம் 41 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின்கீழ்க் கோடிடுக.*

13) சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

1. றப்பர் 2. ரம்புட்டான் 3. மா 4. முள்முருக்கு

14) தேக்கு எந்த மாதத்தில் பூக்கும்?

1. சித்திரை மாதம் 2. ஆடி மாதம் 3. மாசி மாதம் 4. தை மாதம்

15) எமது நாட்டிற்கே உரித்தான தாவரம் அல்லாதது;

1. தேயிலை 2. எண்ணெய்
3. பச்சைக் கொரக்காப்புளி 4. காட்டிலுப்பை

16)  இவ்வுருவில் உள்ள பூ எது?


1. ஒக்கிட் 2. நீல அல்லி
3. அகத்தி 4. லில்லிப் பூ

17) காற்றினால் பரம்பல் அடையும் வித்து எது?

1. ஆடையொட்டி 2. வெடிபலவன் 3. எருக்கலை 4. தாமரை

18) நாற்று மேடையில் பதியம் இட்டுப் பெற்றுக்கொள்ளும் பயிர்க்கன்று எது?

1. மரவள்ளி 2. கறிமிளகாய் 3. வெண்டி 4. போஞ்சி

19)  இவ்வுருவில் உள்ள பூச்சி எது?

1. கும்பிடு பூச்சி 2. பச்சிலைப்பூச்சி
3. அந்துப் பூச்சி 4. ஈ

20) கழிச்சல் நோயைப் பரப்பும் பிராணி எது?

1. எலி 2. ஈ 3. நுளம்பு 4. பூனை

21. சிறிய ஒலிகளைக் கேட்கும் தன்மைகொண்ட பிராணி எது?

1. நாய் 2. பூனை 3. முயல் 4. நரி

22) வயல்களில் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அழிக்கும் பிராணி எது?

1. ஆந்தை 2. காகம் 3. வௌவால் 4. மீன்கொத்தி

23) பின்வரும் முகங்களில் சோகமான முகபாவனையைக் காட்டும் முகம் எது?




24) ஜூன், ஜூலை மாதங்களில் மேற்கு வானில் தோன்றும் உடுத்தொகுதி யாது?

1. பெருங்கரடி 2. ஓராயன் 3. கார்த்திகை 4. தென்சிலுவை

25)  இங்கு காட்டப்பட்டுள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?

1. ரிஷபம் 2. பெருநாய்
3. தென்சிலுவை 4. ஓராயன்

26) இலங்கைக்கு கிழக்கே அமைந்துள்ள நாடு எது?

1. ஆபிரிக்கா 2. சீனா 3. இந்தியா 4. மலேசியா

27) இலங்கையின் தேசிய கொடியில் பச்சை நிறப்பகுதி குறித்து நிற்பது எதனை?

1. சிங்கள மக்கள் 2. முஸ்லிம் மக்கள்
3. தமிழ் மக்கள் 4. தேசிய ஒற்றுமை

28) இலங்கையின் அரச இலச்சினையில் உள்ள நெற்கதிர்களால் குறிக்கப்படுவது;

1. நிலைத்திருத்தல் 2. சௌபாக்கியம் 3. தார்மீகம் 4. தன்னிறைவு

29) 'சிங்கராஜ வனம்' எங்கு அமைந்துள்ளது?

1. குருநாகல் 2. அம்பாறை 3. இரத்தினபுரி 4.மொனறாகலை

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அதிக புள்ளிகளைப் பெறுவதற்கு ‘விஜய்’ பத்திரிகையும் வழிகாட்டியது”



இவ்வாண்டின் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 193 புள்ளிகளைப் பெற்ற மாணவி சர்மிகா சர்வானந்தன் தெரிவித்துள்ள கருத்துக்கள்

**இந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழிமூலம் 3 ஆம் இடத்தைப் பெற்றவர் வவுனியாவைச் சேர்ந்த மாணவி சர்மிகா சர்வானந்தன் ஆவார். வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் மாணவியான இவர், 193 புள்ளிகளைப் பெற்று வவுனியா மாவட்டத்தில் 1 ஆவது இடத்தையும் வட மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

சர்மிகாவை விஜய் பத்திரிகை சார்பாக தொடர்பு கொண்டபோது, அவர் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தொகுப்பாக வழங்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் இருந்தே வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) கல்வி கற்று வருகிறேன். எனது பெற்றோர் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களாக கடமைபுரிந்து வருகின்றார்கள். புலமைப்பரிசில் பரீட்சையில் நான் இந்தளவிற்கு சித்திபெறுவதற்கு எனது வகுப்பு ஆசிரியர், இதர ஆசிரியர்கள், அதிபர், பெற்றோர் போன்ற அனைவரது ஊக்குவிப்பும் காரணமாக இருந்தது. நான் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமையை ஈட்டிக் கொடுத்ததையிட்டு அதிபர், ஆசிரியர்கள், கல்விச் சமூகத்தினர் போன்றோர் தமது மகிழ்ச்சியை எனக்குத் தெரிவித்தனர்.



எனது கல்வி நடவடிக்கைகளில் கல்வித்துறை சம்பந்தமான பத்திரிகைகளை நான் விரும்பி வாசிப்பதுண்டு. குறிப்பாக, 'விஜய்' பத்திரிகை உட்பட, இதர கல்விசார் பத்திரிகைகளும் எனது இந்த வளர்ச்சிக்கு முக்கிய பங்கினை ஆற்றியுள்ளன.

இவ்வாறு கல்விசார் பத்திரிகைகள், புத்தகங்களை நன்றாக வாசித்தமையால் அதிகமான விடயங்களை அவற்றின்மூலம் பெற்றுக்கொள்ள முடிந்தது. விஜய் வாரப் பத்திரிகையை நான் ஒருபோதும் தவறவிடுவதில்லை. அதன்மூலம் பொது அறிவு, கதைகள், புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள், ஆங்கில- சிங்கள மொழிப் பயிற்சி மற்றும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் போன்ற பல்வேறு விடயங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆகையால், புலமைப்பரிசில் பரீட்சையை எழுதும்போது, இந்த அம்சங்களும் எனக்கு உதவியாக இருந்தன.

நான் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தான் படித்தேன். பரீட்சைக்கு செல்லும் போதுகூட எதுவித அச்சமும் இன்றியே சென்றேன். அவ்வாறே, என்னால் பரீட்சையை சரிவரக் குறுகிய நேரத்தில் செய்யக்கூடியதாக இருந்தது. நான் பரீட்சை எழுதும்போது விட்ட ஒரு கவனயீனப் பிழையினால்தான் அகில இலங்கை ரீதியில் என்னால் முதலிடத்தைப் பெற முடியாமல் போனது. இதை நான் தோல்வியாகக் கருதாது எனது எதிர்கால வெற்றியின் முதற்படியாகக் கருதி, தொடர்ந்தும் சிறப்பாகக் கல்வி கற்று பாடசாலைக்கு மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுக்கொடுக்கப் பின்நிற்கப் போவதில்லை.



தொடர்ந்து இதே ஊக்கத்துடனும் இறைவனின் ஆசீர்வாதத்துடனும் கல்வி பயின்று, ஒரு சிறந்த வைத்தியராக வர வேண்டும் என்பதே எனது குறிக்கோள் ஆகும். அதன்மூலம் ஏழை மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கி, அவர்களின் துயர் துடைக்க முடியும் என எதிர்பார்க்கிறேன்.

இனிவரும் காலங்களில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு சில ஆலோசனைகளை தருவதென்றால்....., அதிகமான பயிற்சிகளைச் செய்யுமாறும் பாடசாலையில் கற்பவற்றை தினமும் மீட்டல் செய்து பெற்றோரின் வழிகாட்டலுடன் நன்றாகப் புரிந்து கற்றலை மேற்கொள்ளுமாறும் கூற விரும்புகின்றேன்.

நான் இந்தளவிற்கு சிறந்த புள்ளிகளைப் பெற்று சிறந்ததோர் இடத்தைப் பெறுவதற்கு எனக்கு ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் சித்தியடைந்த பின்னர் பாராட்டுக்களைத் தெரிவித்தோருக்கும் நன்றி கூறுவதுடன், தொடர்ந்தும் சிறப்பாக கல்வி கற்க இறைவனின் ஆசீர்வாதத்தை வேண்டி நிற்கின்றேன்.





பாடசாலை அதிபர் மற்றும் தனது பெற்றோருடன் சர்மிகா....

*“இனிவரும் காலங்களில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு சில ஆலோசனைகளை தருவதென்றால்....., அதிகமான பயிற்சிகளைச் செய்யுமாறும் பாடசாலையில் கற்பவற்றை தினமும் மீட்டல் செய்து பெற்றோரின் வழிகாட்டலுடன் நன்றாகப் புரிந்து கற்றலை மேற்கொள்ளுமாறும் கூற விரும்புகின்றேன்”*



## வகுப்பு ஆசிரியையின் கருத்து

மாணவி சர்மிகா சர்வானந்தன் பற்றிய அவரது வகுப்பு ஆசிரியையான திருமதி. கோமதி ஸ்ரீதரன் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:

“மாணவி சர்மிகா எப்போதுமே படிப்பில் கெட்டிக்காரியாகவே இருப்பார். அவரது இந்த கெட்டித்தனம் எனக்கும்கூட ஓர் உந்துசக்தியாகவே இருக்கும். எப்படியென்றால், படிப்பில் மிகுந்த ஆர்வம்கொண்ட இவர், எப்போதுமே கற்கின்ற விடயங்களில் நுட்பமான கேள்விகளை, சந்தேகங்களை என்னிடம் கேட்பதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் அவருக்கு உரிய பதிலை, விளக்கத்தைக் கொடுப்பதற்காக, நானும் பல தேடல்களை மேற்கொண்டதுடன், உசாத்துணை நூல்களையும் நாடிப் படிப்பதுண்டு. இதன் வாயிலாக நானும்கூட பல விடயங்களை உள்வாங்கக்கூடியதாக இருந்தது.

இத்தனை திறமைமிக்க இவர் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறுவார் என்ற நம்பிக்கை என்னுள் இருந்தது. அது நிஜமாகிவிட்டது. அவர் கல்வித்துறையில் மேலும் பல சாதனைகளை நிகழ்த்த வாழ்த்துகின்றேன்”.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இசையானது உலக மொழியாகக் கருதப்படுகின்றது. இசைக்கு தேச எல்லையோ, இன வேறுபாடோ கிடையாது. மாறாக, இசை அனைவருக்கும் பொதுவானது. எந்தவோர் ஓசையும் காதுக்கு இனிமையளிப்பதாக இருந்தால் அது இன்னிசையாக மாற்றம் பெறுகின்றது. அதன்படி, இசையை அடிப்படையாக வைத்தே இசைக் கருவிகள் தோற்றம் பெற்றன. இசைக் கருவிகள் பல்வேறு இசைகளை வெளிப்படுத்துவதற்கும் இசையை ரசிப்பதற்கும் இசையின் மேன்மையை உணர்த்துவதற்கும் பயன்படுகின்றன. பல்வேறு இசைகளை வெளிப்படுத்துவதற்கேற்ப, இசைக் கருவிகளில் நான்கு வகைகள் உள்ளன.*

# நரம்புக் கருவி

# இசை வெளி

## இசைக் கருவிகளின் வகைப்படுத்தல்

பண்டைய காலத்திலிருந்து கீழைத் தேய மற்றும் மேலைத்தேய இசைக் கருவிகள் பிரதானமாக நான்கு பிரிவு களின்கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு கருவியிலிருந்தும் வெளிப்படும் இசையை அடிப்படை யாகக்கொண்டே, இந்த வகைப்படுத் தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன:

* **நரம்புக் கருவிகள்:** (இவை தந்திக் கருவிகள் அல்லது கோட்டு வாத்தியங்கள் என்றும் அழைக்கப்படு கின்றன)
* **தோல் கருவிகள்:** தோல் களால் உருவாக்கப்பட்டு-அதிரும்போது இசையை எழுப்பக்கூடிய கருவிகள்.
* **துளைக் கருவிகள்** (காற்றுக் கருவிகள்): ஒரு பொருளில் துவாரத்தை ஏற்படுத்தி, அத்துவாரங்களின் ஊடாக, வித்தியாசமான இசைகளை அல்லது ஒலிகளை ஏற்படுத்தும் கருவிகள்.
* **கஞ்சக் கருவிகள்** (கன கருவிகள்): உலோகங்களினால் ஆக்கப்பட்டு ஒலியையும் இசையையும் எழுப்பக் கூடிய கருவிகள். இவை 'உலோகக் கருவிகள்' எனவும் அழைக்கப்படும்.

இந்தப் பிரிவுகளுக்குட்பட்ட ஒவ்வொரு கருவியும் வெவ்வேறு வித மான இசையை எழுப்பக்கூடியது. அந்த வகையில், இவ்விதழினூடாக, நரம்புக் கருவிகள் பற்றி நோக்குவோம்.

## நரம்புக் கருவிகள்

மெல்லிய கம்பிகள் அல்லது தந்திகள் அதிரும்போது, இசையை எதிரொலிக் கும் கருவிகள் 'நரம்புக் கருவிகள்' (String Instruments) எனப் படும். உயர்ந்த ஓசைகளை எழுப்புவ தற்கு இவ்விசைக் கருவிகளின் நரம்புகள் இயன்றவரை இறுக்கமாக இருத்தல் வேண்டும்.

பாரத இசையின் ஆரம்பம் வைதீக காலப்பகுதி வரையில் நீண்டு செல்கின் றது. அக்காலப் பகுதியில்கூட இசை மீட் டுவதற்காக, நரம்புக் கருவிகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. அக்காலத்தில் இக் கருவிகள் 'நூறிசைக் கருவிகள்' என அழைக்கப்பட்டன. அக்கருவிகளில் நூற்றுக்கணக்கான நரம்புகள் இருக்கின் றன என்று அர்த்தப்படும் வகையிலேயே இவ்வாறு அழைக்கப்பட்டன. அத்துடன், அக்காலத்தில் வீணையே பெருமளவில் பாவனையில் இருந்துள்ளது. எனினும், இன்றைய காலத்தில் ஏராளமான நரம்புக் கருவிகள் பாவனையில் உள்ளன.

## நரம்புக் கருவிகளின் குடும்ப அங்கத்தவர்கள் சிலர்...

கிட்டார், இலத்திரனியல் பேஸ், வயலின், வியோலா, ச்செலோ, டபிள் பேஸ், மெண்டலீன், ஊக்லேலி, ஹாப், வீணை, சித்தார், சந்தூர், எஸ்ராஜ், ஸ்வரமண்டலம், தம்பூரா, பென்ஜோ, பியானோ, லூட், சாரங்கீ.

## நரம்புக் கருவிகளை வகைப்படுத்தல்

நரம்புக் கருவிகளை அக்கருவிகளின் தன்மை, இசைக்கும் விதங்களுக்கேற்ப இருவகைப்படுத்தலாம்.

* வில்லால் மீட்டுதல் (சாரங்கீ, எஸ்ராஜ், வயலின், தில்ருபா)



* விரலால் மீட்டுதல் (கிட்டார், ஸ்வரமண்டலம்)

## நரம்புக் கருவிகளில் நரம்புகளை அதிரச் செய்யும் முறை

நரம்புக் கருவிகளில் நரம்புகளை அதிரச் செய்வதன்மூலம் இசையை வெளிப்படுத்தச் செய்யலாம். அத்துடன், நரம்புகளை அதிரச் செய்வதற்காக, பின்பற்றப்படுகின்ற முறைகளின் அடிப்படையில் வெளிப்படும் இசையில் மாற்றங்கள் நிகழும்.



## வெளித் தோற்றத்தின் அடிப்படையில் நரம்புக் கருவிகளை வகைப்படுத்தல்

வெளித்தோற்றத்தின் அடிப்ப டையில் நரம்புக் கருவிகளை மூன்றாக வகைப்படுத்தலாம்.

* Lutes வகை: அதாவது, கருவியில் இசை கட்டுப்பாட்டுப் பகுதி (Sound box) அந்தக் கருவியின் தலை அல்லது முன் பகுதியில் அமைந்திருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிட்டார், மெண்டலீன் ஆகிய இசைக் கருவிகள் இவ்வகையில் அடங்கும்.

- Harps: வீணை வகை.
- Zithers: பியானோ போன்ற கருவிகள்.

### வில்லால் இசைத்தல்

சில வகையான இசைக் கருவிகளை மீட்பதற்கு வளைவான வில் போன்ற அமைப்பு பயன்படுத்தப்படுகின்றது. இந்த அமைப்பு ஆங்கிலத்தில் 'Bow' என்றழைக்கப்படுகின்றது. வில்லின் இரு முனைகளிலும் நாண்கள் இறுக்கமாகப் பொருத்தப்பட்டிருக்கும். வயலின் குடும்ப இசைக் கருவிகளில் காணப்படும் நரம்புகளை (தந்திகளை) இந்த வில்லைப் பயன்படுத்தி மீட்கும்போது (உராய்வை ஏற்படுத்தும்போது) இசை எழுப்பப்படுகின்றது.

### வில்லால் மீட்கப்படும் இசைக் கருவிகள்

வயலின், வியோலா, ச்செலோ, எஸ்ராஜ், சாரங்கீ, டபிள் பேஸ்.

# ...களில் இருந்து ...ப்படும் விதம்

### துணை அமைப்பொன்றினால் இசை பிறப்பித்தல்

பென்ஜோ, கிட்டார், லூட், மெண்டலீன், சித்தார், ஹாப் போன்ற இசைக் கருவிகளில் துணை அமைப்பொன்றின் உதவியுடன் நரம்புகளில் அதிர்வை ஏற்படுத்தும்போது, இசை வெளிப்படுகின்றது. இவ்வாறு செய்வதை பேச்சு வழக்கில் 'Plucking' என்று கூறுவர். ஆரம்பகாலத்தில் இவ்வகை இசைக்கருவிகளில் பறவைகளின் இறகுகளைப் பயன்படுத்தி இசை மீட்டப்பட்டது. ஆனாலும், தற்காலத்தில் இதற்காக சிறிய முக்கோண வடிவிலான அல்லது கூர்போன்ற அமைப்பொன்று பயன்படுத்தப்படுகின்றது. இதனை 'மிஸ்ராப்' அல்லது 'ப்ளெக்ட்ரம்' (Plectram) என்பர். இந்த நுட்பமுறை Pizzicato என்ற இத்தாலிச் சொல்லால் அழைக்கப்படுகின்றது.



விரலில் பூட்டியுள்ள துணை அமைப்பு



### துணை அமைப்பினால் மீட்டப்படும் இசைக் கருவிகள்

சித்தார், கிட்டார், லூட், மெண்டலீன், ஹாப், பென்ஜோ, Harpsichord என்றழைக்கப்படும் வதிப்பலகை (Keyboard) பொருத்தப்பட்ட இசைக்கருவிகள் போன்றவை இதில் அடங்கும்.

### தட்டும்போது இசை பிறப்பவை

இவ்வகை இசைக் கருவிகளை மீட்டுவதற்கு பெரும்பாலும் கைவிரல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதன் ஊடாக, கருவியில் அதிர்வு ஏற்பட்டு இசை வெளிப்படுகின்றது. வயலின் வகைக் குடும்பத்தைச் சார்ந்த இசைக் கருவிகளை மீட்டும்போது, இந்த நுட்பமுறை பின்பற்றப்படுகின்றது. இந்த நுட்பமுறை 'Collegno' என்றழைக்கப்படுகின்றது.

உ+ம்: வியோலா, ச்செலோ என்பனவாகும்.




### வேறு முறைகளைக் கையாள்தல்

Aleoline barp என்ற வகை இசைக் கருவியை மீட்டுவதற்கு புதுமையான முறை பின்பற்றப்படுகின்றது. அதுதான் வாயு அதிர்வு முறையாகும். அதன்மூலம் இசை வெளிப்படுத்தப்படும். மேலும், சில நரம்புக் கருவிகள் சட்டங்களில் பொருத்தப்பட்டுள்ளன. உதாரணமாக: பியானோ, கிளெச்கோட், ஹாப்சிகோட் போன்ற கருவிகளைக் குறிப்பிடலாம். வதிப்பலகையிலுள்ள (Keyboard) ஒரு வதியை (key) அழுத்துவதனூடாக, சுத்தியல் போன்ற ஓர் அமைப்பினால் நரம்புகளின்மீது அடிக்கப்படுகின்றது. பின்னர் அந்த சுத்தியல் போன்ற அமைப்புகள் மீண்டும் பழைய நிலைக்கு வரும்போது, குறித்த நரம்புகள் தொடர்ந்து அதிர்வுறச் செய்யப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து இந்த அதிர்வுகள் ஒலிப்பலகையின் (Soundboard) மீது செலுத்தப்படுகி



றது. பின்பு, இந்த ஒலிப்பலகையின் மூலமாக, ஒலி அலைகள் காற்றில் கலந்து ஒலியாக வெளிப்படுகிறது. இவ்வாறுதான் பியானோ போன்ற இசைக்கருவிகளில் இசை வெளிப்படுத்தப்படுகின்றது.



அத்துடன்; டபிள்பேஸ், வயலின் போன்ற இசைக்கருவிகளை காந்த செயற்பாடுடைய வில்லைப் பயன்படுத்தி மீட்டும்போது, இசை வெளிப்படுகின்றது. இந்த உபகரணம் 'E bow' என்ற சிறிய மின்கலம் பொருத்தப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இலத்திரனியல் கிட்டாரின் நரம்பதிர்வுகளைக் கட்டுப்படுத்தி தேவையான இசையை மீட்டிக்கொள்ள முடியும். இது தவிர, வயலினில் நரம்பு அதிர்வுகளை தேவைக்கேற்ப மேற்கொள்ள இலத்திரனியல் அமைப்பொன்று பயன்படுத்தப்படுகின்றது. இது Bow Machine என அழைக்கப்படுகின்றது. இவை தவிர, பியானோ உட்பட, பல்வேறு கருவிகள் இன்றளவில் இலத்திரனியல் முறையில் இசைக்கப்படும் நிலைக்கு மாறியுள்ளன.



### இரு கரங்களால் பிடித்தவாறு இசை மீட்டல்

இரு கரங்களாலும் தூக்கிப்பிடித்தபடி இசைக்கும் கருவிகளுக்கு உதாரணமாக, சந்தூர் இசைக்கருவியைக் குறிப்பிடலாம். இக்கருவியிலுள்ள நரம்புகளில் சிறிய ஓர் ஆதாரத்தின்மூலம் அதிர்வை



ஏற்படுத்துவதனூடாக, இசை வெளிப்படுகின்றது.

### விரல் நுனியால் இசை மீட்டல்



விரல் நுனியைப் பயன்படுத்தி வாசிக்கும் இசைக் கருவிகளும் உள்ளன. விரல் நுனியால் நரம்புகளை அதிரச் செய்வதனூடாக, இக்கருவிகளில் இசை பிறப்பிக்கப்படுகின்றது. தம்பூரா, கிட்டார் போன்ற இசைக் கருவிகள் இதற்கு உதாரணமாகும்.

### நரம்புக் கருவிகளின் நரம்புகளை தயாரித்தல்

நரம்புக் கருவிகளிலுள்ள நரம்புகள் (தந்திகள்) பெரும்பாலும் உலோகங்களைப் பயன்படுத்தியே தயாரிக்கப்படுகின்றன. இசைக்கருவிகளின் தன்மைக்கேற்ப வெவ்வேறு நீள அளவுகளிலும் கனத்திற்கேற்பவும் நரம்புகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த நரம்புகளை தயாரிப்பதற்கு தாவர நார்கள், நூல் வகைகள், செம்பு, இரும்பு, உருக்கு, பித்தளை போன்ற மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அமீர் ஜொனசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைத்தொடர்பு சாதனங்கள்



இன்று உலகில் தொலைத்தொடர்பு சாதனங்கள் மிக அசுர வேகத்தில் பரவி வருகின்றன. ஆரம்பகாலங்களில் பறவைகள், பறைசாற்றுதல், ஓவியங்கள் என்பனவற்றின்மூலம் செய்திகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. ஆனால், தற்போது ஒலிபெருக்கி, தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, இணையம் என நவீன தொடர்பு சாதனங்கள்மூலம் செய்திகள் பரிமாறப்படுகின்றன. இதனால், மக்கள் பெரும் பயன்களைப் பெறுகின்றனர். இத்தொலைத்தொடர்பு சாதனங்களில் திரைக்கணினி, கையடக்கத் தொலைபேசி என்பன முக்கியமானவையாகும். இதில் மின்னஞ்சல், தொலைநகல் (Fax), இணையத்தளம் என்பன எமக்குப் பெரிதும் உபயோகமான அதிநவீன சாதனங்களாகும். மேலும், ஓர் அவசர செய்தியை தெரிவிக்க வேண்டுமெனில், இணையம், மின்வஞ்சல் போன்ற வழிகள்மூலம் அதிவிரைவாக செய்திகளைப் பரிமாறிக்கொள்ளமுடியும். அத்துடன், வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்களைக் கண்டுகளிக்கவும் திரைக்கணினி பெரிதும் துணைபுரிகின்றது. எனவே, தொலைத்தொடர்பு சாதனங்கள் நமது வாழ்வில் இன்றியமையாத ஒரு தேவையாகவே தற்போது மாறி வருகின்றது.

வி.வேணீஷன்

## வெள்ளைச் செய்திகள்

★ 'வெள்ளை நகரம்' என அழைக்கப்படுவது யுகொஸ்லாவியாவின் பெல்கிரேட் நகரமாகும்.

★ 'வெள்ளை மண்டபம்' லண்டன் நகரிலுள்ள பிரித்தானிய அரசாங்க அலுவலகமாகும்.

★ 'வெள்ளை மாளிகை' அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம்.

★ 'வெள்ளை நதி' ஆபிரிக்காவின் மத்தியில் ஓடும் நதி.

★ 'வெள்ளை ஈயம்' எனப்படுவது காரியக்காபனேற்று ஆகும்.

★ 'வெள்ளை மனிதர்' எனப்படுபவர்கள் ஐரோப்பியர்.

★ 'வெள்ளை இரவுகள்' என ரஷ்யாவில் இரவே இல்லாத நாடுகள் அழைக்கப்படுகின்றன.

★ 'வெள்ளைக் கோடுகள்' என போக்குவரத்தைக் கட்டுப்படுத்த வரையும் கோடுகள் குறிப்பிடப்படுகின்றன.

★ 'வெள்ளை மருந்து' என உயிர்க்கொல்லி மருந்துகள் கூறப்படுகின்றன.

★ 'வெள்ளைப் புரட்சி' இது பால் வளம் பெருகுவதைக் குறிப்பிடுகின்றது.

★ 'வெள்ளை யுத்தம்' இரத்தம் சிந்தாப் போரைக் குறிக்கும்.

★ 'வெள்ளை நிலக்கரி' என நீரின் விசையாற்றல் குறிப்பிடப்படுகின்றது.

ருகையா ரில்வான், முஸ்லிம் பெண்கள் தே.பாட., தர்கா நகர்.



## சட்டை

புத்தம் புதிய சட்டை  
பூக்கள் நிறைந்த சட்டை  
விதத்தில், நிறத்தில் ஒன்றாய்  
வேண்டும் எனக்குச் சட்டை!

அழகு மிக்க சட்டை  
இப்போ கேட்டு வைத்தால்  
இந்த ஆண்டே கிடைக்கும்.

விதம் விதமாய் சட்டை  
அப்பா வாங்கித் தருவார்  
சட்டைதனை அணிந்தே  
மகிழ்ச்சி நானும் கொள்வேன்!

ந.ப.நஹீதா,  
தில்லையடி, புத்தளம்.

## புத்திசாலி முயல்கள்





ஒரு காட்டில் மூன்று முயல்கள் வாழ்ந்து வந்தன. அவை பருமனில் மிகவும் பெருத்தும் அதேவேளை, புத்திசாலித்தனமாகவும் காணப்பட்டன. அதைக்கண்ட நரி ஒன்று நெடுநாட்களாகவே அந்த மூன்று முயல்களையும் உண்ண வேண்டுமென்று எண்ணம் கொண்டது. அவ்வாறே, அந்த முயல் மூன்றையும் நரி சந்திக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. அப்பொழுது, நரி ''அற்ப முயல்களே, நான் உங்களைப் பிடித்து உண்ணப்போகின்றேன்'' என்று மிரட்டியது. அதற்குப் புத்திசாலி முயல்கள் ''நாங்கள் உங்களிடம் மாட்டிக்கொண்டபடியால், நாங்களே உங்களிடம் சரணடைந்து விடுகின்றோம்'' என பணிவுடன் கூறின. ''உங்களைபார்க்கப் பாவமாக உள்ளது. ஆகையால், உங்களது கடைசி ஆசை என்ன? என்று சொல்லுங்கள்'' என்றது நரி. ''நீங்கள் இனிமையாகப் பாட நாங்கள் மகிழ்ச்சியாக ஆட வேண்டும். அதுவே எங்கள் கடைசி ஆசை'' எனக் கூறின புத்திசாலி முயல்கள். ''அவ்வளவு தானா? இதோ, நான் பாடுகிறேன் நீங்கள் ஆடுங்கள்'' எனக்கூறி நரி ஊளையிட ஆரம்பித்தது.

நரியின் ஊளையிடுதலைக் கேட்டு முயல்கள் நன்றாக ஆடின. நரி தனது பாட்டின் இனிமையால்தான் முயல்கள் ஆடுகின்றன என எண்ணி மேலும் பெரிதாக ஊளையிட ஆரம்பித்தது. முயல்களின் ஆட்டத்தில் மதி மயங்கிய நரி தன்னிலை மறந்தது. இதுதான் தக்க சமயம் என எண்ணிய மூன்று முயல்களும் நரியின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுத் தப்பிச் சென்றன.

கு.வைஷாலினி,  
சைவமங்கையர் வித்தியாலயம்,  
கொழும்பு.



## உங்களுக்குத் தெரியுமா!



✱ உலகில் மிகப் பெரிய அரண்மனை உள்ள நாடு - சீனா

✱ வருடந்தோறும் பூமியில் புதைந்து வரும் நாடு - நெதர்லாந்து

✱ படகு வடிவில் அமைந்துள்ள நாடு - இத்தாலி

✱ கடல் மட்டத்துக்கு கீழுள்ள நாடு - டென்மார்க்

✱ வருடந்தோறும் ஜனாதிபதியை தெரிவு செய்யும் நாடு - சுவிற்சர்லாந்து

✱ உலகில் மிகப் பழைமையான நாடாளுமன்றம் உள்ள நாடு - ஐஸ்லாந்து

✱ தினசரிப் பத்திரிகைகள் இல்லாத, படிக்கத் தெரியாத மக்கள் உள்ள நாடு - கெம்பியா

✱ உலகின் தட்டையான, சமதளமான நாடு - மாலைதீவு

✱ கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை அறிமுகம் செய்த நாடு - நோர்வே

✱ ஒரு நாட்டின் பரப்பளவிற்குள் அமைந்திருக்கும் இன்னொரு நாடு - லெசதோ

வி.சாகித்தியா,  
வ.வ.த.ம.வித்., வவுனியா.



## மகாத்மா காந்தி




மகாத்மா காந்தி வட இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர் 1869 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். இவருக்கு இவரது பெற்றோர் வைத்த பெயர் மோகனதாஸ் காந்தி என்பதாகும். இவர் தமது ஆரம்பக் கல்வியை உள்ளூரிலேயே கற்றார். தமது இள வயதில் அரிச்சந்திரன் நாடகம், சரவணன் நாடகம் போன்றவற்றைப் பார்த்து நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிப்பவராகவும் உண்மை பேசுபவராகவும் விளங்கினார். இவர் சட்டக்கல்வி கற்பதற்காக, இங்கிலாந்து சென்றிருந்தார். அத்துடன், காந்தியடிகள் 'சத்திய சோதனை' எனும் அவரது சுயசரிதை நூலையும் எழுதினார். இந்நூல் மூலமாக, இவரது சுயசரிதையை நாம் அறியலாம். மகாத்மா காந்தி அவர்கள் சத்தியமே கடவுள் என்று வாழ்ந்து காட்டிய மகா உத்தம புருஷராவார்.

கெ.ச.சஜன், ஹில்பன் சர்வதேச பாட., பலாங்கொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இடைவெளிகளை நிரப்புக 3




## சேர்த்து எழுதுக 5

1. கல்+குகை - ..............................
2. ஆறு + நீர் - ..............................
3. திங்கள் + கிழமை - ..............................
4. பூ + இதழ் - ..............................


## எத்தனை உள்ளன? 2



## சரியான விடையில் கோடிடுக 4

1. 'வெள்ளம்' என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் எது?
   1)flud 2) flood 3) field
2. 'பாலைவனக் கப்பல்' என்ற சிறப்புப் பெயர் பெற்றது எது?
   1) ஒட்டகம் 2) பாய்க்கப்பல் 3) பேரீச்ச மரம்
3. 'நான் நாளை வருவேன்'. இங்கு 'நான்' என்பது குறிக்கும் இடப்பெயர் யாது?
   1) முன்னிலை 2) படர்க்கை 3) தன்மை

## ஒரே மாதிரியான உருவில் ✓ அடையாளமிடுக 1







தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.11.02 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 336
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 333 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
கே.ஆரபி, மக்கெய்சர் வீதி, உவர்மலை.

**போட்டி: 02**
முஸ்பிர் அஹமட்,
புகாரி மஸ்ஜித் மாவ., கல்பொக்க.

**போட்டி: 03**
ஆகிப் அஹமட்,
5 ஆம் குறுக்குத் தெரு, புத்தளம்.

**போட்டி: 04**
பா.மதுர்ஷன்,
சூசைப்பிள்ளையார் குளம், வவுனியா.

**போட்டி: 05**
எம்.வினித்தா, குட்டியகொல்லை, பதுளை.

**பாராட்டுப் பெறுவோர்:**

★ எம்.நஷீப், திஹாரிய.
★ வி.கௌஷி, திகன.
★ யு.ஜெனஸ்ரீன், தும்பளை.
★ ஏ.ரஸ்லான், கொடபிடிய.
★ எஃப். சஹீமா, மொறட்டுவை.
★ லியோ தக்ஷின், நீர்கொழும்பு.
★ ம.பிரணவிகா, கல்முனை.
★ எம்.மதீன், பறகஹதெனிய.
★ கு.தர்ஷிகா, மஸ்கெலியா.
★ எம்.றஹீமா, கெகிராவை.

## அறிவுக்கு விருந்து 333 விடைகள்

**போட்டி: 02**

| | | | |
|---|---|---|---|
| [1] b | a | r | [2] n |
| e | | | o |
| a | | | s |
| [3] r | a | k | e |

**போட்டி: 03**




**போட்டி: 04**

1. புராணம்
2. கிளித்தட்டு
3. மண்புழு
4. களஞ்சியம்
5. சந்தர்ப்பம்

**போட்டி: 05**

1. அரக்கன் - அரக்கி
2. ஆடவர் - பெண்டிர்
3. புத்திரன் - புத்திரி
4. சீமான் - சீமாட்டி

## விஜய் வாசகர் மடல்



விஜய்யே! நீ வாழ்க.... வளர்க வையகமே போற்ற....! உன் சேவையானது மாணவர்களுக்கு பெரும் பயனளிக்கின்றது. குறிப்பாக, கடைசிப் பக்கத்தில் வெளிவரும் தொழில்நுட்பம் மற்றும் கணினி சார்ந்த விடயங்கள் என்னைக் கவர்ந்தவை. அதனைத் தொடர்ந்து பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**-ஐ.எம்.இல்ஹாம்,**
**சில்வெஸ்டர்ஸ் கல்லூரி,**
**கண்டி.**

வியக்கவைக்கும் 'விண்வெளித் தகவல்கள்', நாடுகள் பற்றி அறியத்தரும் 'வாரம் ஒரு நாடு', 'இராமாயணம்' என்பன உட்பட, உன்னில் பிரசுரமாகும் ஏனைய விடயங்களும் அனைவருக்கும் பயன்படக்கூடியதாக உள்ளன.

**- ஏ.எச்.எம்.சஜாத், மிஸ்பாஹுல் உலும் அரபுக் கல்.,**
**ரத்மல்யாய.**

'உணவு வகைகள் பழுதடைதல்', 'உலக உணவு தினம்', 'மாச்சு பிச்சு', 'நெனோ தொழில்நுட்பம் பற்றிய தகவல்கள்' போன்றவை சுவாரஸ்யமானவை. 'சூரிய ஆடை', 'கொடைத்திறன்', 'ஒற்றுமையின் வலிமை' போன்ற சிறுகதைகளை மிக ஆவலுடன் வாசித்தேன். உன் பயணம் தொடர வாழ்த்துக்கள்.

**- அப்துல் முனாப்,**
**மருதானை, பேருவளை.**

'வரலாற்றிலிருந்து' தொடங்கி 'இராமாயணம்' வரை அறிவுபூர்வமான தகவல்களைத் தாங்கி வருகின்றாய். உன் அறிவினால் நாம் ஈர்க்கப்படுகின்றோம். நீ என்றும் நிலைத்திருக்க மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**-மதுமிதா சலோமி,**
**திருநாவற்குளம், வவுனியா.**

'தோல்வியை எண்ணி வருந்தாமல் வெற்றிக்காக உழையுங்கள்' என்ற தலைப்பின்கீழ் பிரசுரமான 'கல்வி முகாமைத்துவம்' சிறந்த அறிவுரைகளை நமக்கு வழங்கிச் சென்றது. இப்பகுதி மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டல்களை வழங்குவதில் முன்நிற்கின்றது எனலாம்.

**- ச.வினோஜ்குமார்,**
**புவக்கொடமுல்ல, பதுளை.**



'உணவு பழுதடைதல்' எனும் ஆக்கத்தினூடாக, பல்வேறு தகவல்களை பட விளக்கங்களுடன் அறிய முடிந்தது. 'மாச்சு பிச்சு' பற்றி வாசிக்கும் போது, நாம் அங்கு சென்றுவிட்டதைப் போன்ற எண்ணம் தோன்றியது. அதுவொரு சுவாரஸ்யமான கட்டுரை என்றால் தவறில்லை. அத்துடன், 'காற்றாடி', 'நிலநடுக்கத்தை முன்கூட்டி அறியும் எறும்புகள்', 'தெரிந்துகொள்வோம்', 'கணினி தகவல்கள்' என்பனவும் சுப்பர்.

**- எஃப்.ஜெஸ்மின்,**
**நாம்புளுவ, பஸ்யால.**

*'மாச்சு பிச்சு' குறித்த ஆக்கம் சுவாரஸ்யமானது. 'காற்றாடி' ஆக்கத்தினூடாக,*



*அதன் வரலாறு பற்றியும் பட்டங்களின் தலைநகரம் மற்றும் அருங்காட்சியகம் பற்றியும் அறிந்துகொண்டேன். 'உலக உணவுதினம்' தொடர்பான கட்டுரையும் சிறப்பானது.*

**- ஆர்.மில்லேனியா,**
**பேஸ்லைன் வீதி, கொழும்பு.**

இந்த இதழில் (26.10.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.11.2011.

அனுப்ப வேண்டிய முகவரி: வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை- 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிருபராசா-நல்லம்மா தம்பதியரின் செல்வப் புதல்வன் நேறுஜன், 30.10.2011 அன்று தனது பதினோராவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் முருகப் பெருமான் அருள்பெற்று, நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.



கிறேன்பாஸைச் சேர்ந்த செல்வகுமார்-ரொஸ்லின் தம்பதியரின் செல்வப் புதல்வி மெட்லின், 01.11.2011 அன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் அன்னை வேளாங்கன்னி மாதா அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



ஓபநாயக்க- உனுவலையைச் சேர்ந்த ரஜினிகாந்-ரோகினிமேரி தம்பதியரின் செல்வப் புதல்வன் ரஸ்வின் சர்மா, 01.11.2011 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை வெகு விமர்சையாகக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அம்மா பகவானின் அருள்பெற்று, வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: வித்யா தில்ருக்ஷி)

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



களுத்துறை-ஹல்வத்துறையைச் சேர்ந்த ஜெயசங்கர்-விஜயகுமாரி தம்பதியரின் செல்வப் புதல்வி லக்ஷிகா, 23.10.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: ஜி.லோகேஸ்வரி)*



லிந்துலை-தலாங்கந்தை தோட்டத்தைச் சேர்ந்த அசோகன்-யோகேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஏ.கவிஸான், 21.10.2011 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: அண்ணன் வினோ)*

# யானைத் தந்த வேலை

ஓவியம் வரைவோம் - 73

யானைத் தந்தத்தினால் பல்வேறு அலங்கார வேலைகள் செய்வது இலங்கையில்



பாரம்பரியமாக நடைபெற்று வரும் ஒரு கலைக் கைத்தொழிலாகும். யானைத் தந்த ஏற்றுமதிக்கு இலங்கை பண்டைக்காலம் தொட்டு புகழ்பெற்று விளங்குகின்றது.

பண்டைக்காலத்தில் யானைத் தந்தம், தங்கம், வெள்ளி போன்ற வேலைகளைச் செய்வோர் அரசனின் முக்கிய பங்காளிகளாக இருந்துள்ளனர். அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டிக்காலங்களில் இத்தொழில்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. யானைத்



தந்தங்களில் சிற்பங்கள் செதுக்குதல், உருவங்கள் அமைத்தல் போன்றன 'தந்த வேலை' எனப்படுகின்றது. தந்தத்தினால் நகைப்பெட்டிகள், சீப்பு, வளையல்கள், மாலைகள் போன்ற அணிகலன்களும் செய்யப்படுகின்றன. (தொடரும்)

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஸ்.ஆய்ஷா,
பஹல கொரகோய, நாவலப்பிட்டி.



யே.சிந்துஜன்,
பரிகாரிகண்டல் அ.த.க.பாட.,
முருங்கன்.



எம்.இன்ஷாப்,
அசோகா ம.வித்., கண்டி.




மு.சுகாம்,
மூதூர் மத்திய கல்லூரி,
மூதூர்-05.



எம்.ஸஹீர்,
ஜாமியா பாலர் பாட., ஹொரம்பாவ.



எம்.ரிசாட்,
உடஹிடிகம மு.வித்., மடாடுகம.



குக்ஷான் குமார்,
தி.சி.தமிழ் வித்.,
பொல்கஹவெல.



எம்.பயாஸ்,
நாச்சியாதீவு மு.ம.வித்.,
நாச்சியாதீவு.



வி.கஸ்னா,
தெமோதர த.ம.வித்.,
தெமோதர.




சி.கோகுலன்,
சமர்செட் த.வித்., நானுஓயா.



எஃப்.ஸாயிலா,
அலவியா முஸ்லிம் ம.வித்.,
பாணந்துறை.



எஃப்.நஜ்லா,
அல்-முபாறக் தே.பாட.,
மல்வானை.



கே.கிசாந்தன்,
கலைமகள் த.வித்., மாவதுர.



ஆப்னா மார்க்,
அல்-அஸ்ஹர் மத்.கல்.,
திஹாரிய.



எஃப்.நுஸ்கா,
தில்லையடி மு.ம.வித்.,
தில்லையடி.



சு.ஹரிப்பிரியா,
புண்டுலோயா த.ம.வித்.,
புண்டுலோயா.



எச்.உமைரா,
முஃராமா பாடசாலை, மல்வானை.

தம்பி, தங்கைகளே!

## 'கைவண்ணங்கள்' குறித்து உங்கள் கவனத்திற்கு...!



உங்கள் கைவண்ணங்களை 'A4' தாளில் மட்டும் வரைந்து அனுப்புங்கள். அதன் பின்பக்கத்தில் உங்கள் பெயர், கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர் என்பனவற்றை தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

உங்கள் கற்பனைக்கேற்றவாறு, பல்வேறு கருப்பொருள்களின்கீழ் அலங்காரங்கள், காட்சிகள் என ஓவியங்களை வரைந்து அனுப்பி, கைவண்ணங்கள் பகுதியில் இடம்பிடித்துக்கொள்ளுங்கள். நேர்த்தியாகவும் அழகாகவும் வரையப்படும் ஓவியங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனை செய்த உதவி



மேகனத்தூர் என்று ஒரு சிற்றூர் இருந்தது. வயல்வெளி சூழ்ந்த 'பச்சைப் பசேல்' என்ற அழகான கிராமம் அது. அந்த ஊரில் உள்ள பாடசாலை ஒன்றில் நவீன் ஆறாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான்.

ஒருநாள் நவீன் பாடசாலை சென்று திரும்பிக் கொண்டிருக்கையில், வீதியோரத்தில் உள்ள ஒரு புளிய மரத்தின் அடியில், பூனைக்குட்டி ஒன்று 'மியாவ் மியாவ்' என்று கத்திக் கொண்டிருந்தது. அதன் அருகில் சென்று அதனை வாஞ்சையுடன் தடவி விட்ட நவீன், அதிர்ச்சி அடைந்தான். அதன் காலில் அடிபட்டு ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. உடனே அதை வீட்டிற்கு எடுத்துச் சென்று அதன் காயத்திற்கு மருந்து போட்டுக் கட்டி விட்டான். சிறிது நேரத்தில் பூனைக்குட்டியும் அவன் மடியில் நிம்மதியாகத் தூங்கிவிட்டது.

அப்போது சந்தைக்குச் சென்றிருந்த அவனது தந்தை சரவணன் வீடு திரும்பினார். நவீனின் மடியில் பூனைக்குட்டி இருப்பதைப் பார்த்த அவருக்கு கோபம் வந்துவிட்டது. "நவீன் இந்தப் பூனைக்குட்டியை எங்கு பிடித்தாய்? அதை ஏன் மடியில் தூக்கி வைத்திருக்கிறாய்? ஒழுங்காகப் படிக்கிற வேலையைப் பார். அதை விட்டுவிட்டு இப்படி பூனையுடன் இருந்தால் படிக்க முடியுமா?" என்று கோபத்துடன் கத்தினார்.

மறுநாள் காலை.

நவீனின் அப்பா வீட்டில் இருந்து வெளியே செல்லும்போது, பூனை குறுக்கே சென்றது. "காலையில் வெளியே செல்லும்போது பூனை குறுக்கே சென்றால், போகின்ற காரியம் சரிவருமா? இதெல்லாம் உனக்கு எங்கே தெரியப் போகிறது?" என்று நவீனின் அம்மாவைப் பார்த்துக் கோபமாகக் கேட்டார் அவனது அப்பா சரவணன்.

பூனையால்தான் பெற்றோர்களுக்குள் சண்டை வருகிறது என்பதை நவீன் உணர்ந்தான். அதனால், உடனே ஒரு முடிவுக்கு வந்த அவன், அப்பூனையைத் தமது தோட்டத்திற்கு தூக்கிச் சென்றான். "உனக்கு என்ன வேண்டுமோ அதனை இங்கே கொண்டு வந்து தருகிறேன். வீட்டுக்குள் வராதே. நானே உன்னை வந்து பார்க்கிறேன்" என்றான், நவீன். பூனையும் அவன் சொல்வதைக் கேட்டு, அவன் வீட்டிற்குள் வருவதில்லை.

தினமும் பாடசாலைக்குச் செல்லும் முன், நவீன் பூனைக்குத் தேவையான உணவை தோட்டத்திற்குச் சென்று அதன்முன் வைத்துவிட்டுச் செல்வான். மாலையில் வீடு திரும்பியதும், பூனையை மடியில் தூக்கி வைத்து விளையாடுவான்.

ஒருநாள் பூனையுடன் சந்தோஷமாக விளையாடிக்கொண்டிருந்த நவீன், அதன் அருகில் படுத்துத் தூங்கிவிட்டான். அப்போது பூனையும் அவன் அருகிலேயே அமர்ந்திருந்தது.


அப்போது ஒரு பாம்பு நவீனின் கால் அருகே வந்தது. பாம்பைக்கண்ட பூனை 'மியாவ் மியாவ்' என்று கத்தியது. நவீன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்ததால், பூனையின் சத்தம் கேட்டு அவன் எழுந்திருக்கவில்லை. பூனைக்குட்டி தைரியமாக நவீனின் அருகே சென்று வேகமாக வந்த பாம்பைத் தன் முன்னங்கால்களால் பிடித்துத் தூக்கி எறிந்தது. பூனையின் விநோதமான சத்தத்தைக் கேட்டு, நவீனின் பெற்றோர் ஓடி வந்தனர். பூனை, பாம்பிடம் இருந்து மகனைக் காப்பாற்றியதைப் பார்த்தனர். மகன் பெரிய ஆபத்தில் இருந்து மீண்டதால் அவர்கள் கண்களில் கண்ணீர் வடிந்தோடியது. அவர்கள் பூனையைத் தூக்கி வருடியபடியே வீட்டிற்குள் கொண்டு சென்றனர். அதன்பின்னர் நவீன் மட்டுமன்றி; அவனது பெற்றோரும் பூனையை மிக அன்பாகக் கவனித்துக்கொண்டனர்.

# சேவை

ஒரு ஊரில் வயதான செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன. ஆனால், அவருக்கு வாரிசு இல்லை. எனவே, அவர் அதிகளவு தான-தர்ம காரியங்களில் ஈடுபட்டார். அவருக்கு உதவியாக செல்வம், மருது என்ற இரண்டு இளைஞர்கள் பணிபுரிந்தனர்.

செல்வந்தர் தனக்குப் பின்னர் இவர்களில் யாரிடம் பொறுப்பை ஒப்படைப்பது என்று குழம்பினார். எனவே, இருவருக்கும் பரீட்சை ஒன்றை வைக்க முடிவு செய்தார்.

அதன்படி, ஒருநாள் இருவரிடமும் சிறிது பணத்தைக் கொடுத்து, "இளைஞர்களே! உங்கள் இருவரிடமும் பணம் கொடுத்துள்ளேன். இந்தப் பணத்தைக்கொண்டு விலைமதிப்பற்ற ஒரு பொருளை வாங்கி வாருங்கள். ஒரு வாரகாலம் உங்களுக்கு அவகாசம் தருகிறேன்" என்று கூறினார்.



இருவரும் பணத்தைப் பெற்றுக் கொண்டு தனித்தனியாகப் பிரிந்து சென்றனர்.

ஒரு வாரத்தின் பின்...

இருவரும் செல்வந்தரின் வீட்டிற்குத் திரும்பி வந்தனர்.

"மருது நீ என்ன கொண்டு வந்துள்ளாய்?" என்று கேட்டார், செல்வந்தர்.

"ஐயா, நீங்கள் கொடுத்த பணத்திற்கு நான் நவரத்தினக் கற்களை வாங்கி வந்துள்ளேன். இவை அதிர்ஷ்டக் கற்கள். இதை அணிபவருக்கு யோகம் கூடும். எனவே, நான் பல சிரமங்களுக்கு மத்தியில் இதனைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் மருது.

"அப்படியா? மகிழ்ச்சி. செல்வம், நீ என்ன வாங்கினாய்?" என்று செல்வத்தைப் பார்த்துக் கேட்டார்.

"ஐயா, மன்னித்துக்கொள்ளுங்கள். நான் சென்ற ஊரில் குடிநீர் பஞ்சம் தலைவிரித்தாடியது. அதனால், நீங்கள் கொடுத்த பணத்தைக் கொண்டு, ஓர் ஆழ் துளைக் கிணற்றை வெட்டி, குடிநீர்த் தொட்டிக்கு ஏற்பாடு செய்யப் பணத்தை வழங்கிவிட்டேன்" என்றான்.

செல்வந்தர், செல்வத்தைக் கட்டித் தழுவினார்.

"மிக்க மகிழ்ச்சி, செல்வம். மக்களின் தாகத்தைப் போக்கி, நிலையான பெயரைப் பெற்றுவிட்டாய். உன்னைப் போன்ற தயாள குணம் உடையவனைத்தான் எனது சொத்துக்களுக்கு வாரிசாக நியமிக்க எண்ணி இருந்தேன். இனி நீதான் எனது சொத்துக்கு வாரிசு. இந்தப் பணத்தை ஏழைகளின் நலனுக்குச் செலவிடு" என்றார், மகிழ்ச்சியுடன்.

"அப்படியே செய்கிறேன் ஐயா!" என்றான், செல்வம்.

# அரசரும் புலவரும்

புலவர் ஒருவர், மிகச் சிறந்த கவிதை ஒன்றை எழுதினார். அதை அரசரின் அவையில் படித்துக் காட்டி, தகுந்த பரிசைப் பெற விரும்பினார். அதனால், கவிதையுடன் அவர் அரசரைச் சந்தித்து தமது விருப்பத்தை அவரிடம் எடுத்துரைத்தார்.

இதற்கமைய, அரசரும் சபையைக் கூட்டினார். புலவருக்குத் தகுந்த ஆசனம் அளித்து, கவியைப் பாடுமாறு கூறினார். புலவர் அரசரை வணங்கிவிட்டு, தாம் இயற்றிய கவிதைகளைப் பாடினார். நயமான, சுவை நிறைந்த அக்கவிதைகளைக் கேட்டு அரசரும் அவையோரும் அக மகிழ்ந்தனர்.

"புலவரே! மிக அற்புதமாக இருந்தன உங்கள் கவி வரிகள், உங்களுக்குத் தகுந்த பரிசளிக்க விரும்புகிறேன்" என்று கூறிய அரசர், தமது நிதியமைச்சரை நோக்கி, "இவருக்கு ஐம்பதாயிரம் பவுன்களை அளியுங்கள்" என்று உத்தரவிட்டார்.



'ஐம்பதாயிரம் பவுன் பரிசு' என்று கூறியதும் புலவர் முக மலர்ச்சியுடன் நிதியமைச்சரிடம் சென்றார்.

அமைச்சர் பரிசுத் தொகையைக் கொடுக்காமல் அமர்ந்திருப்பதைப் பார்த்த புலவர் அவருக்குத் தமது பரிசுத் தொகை பற்றி நினைவூட்டினார். "ஐம்பதாயிரம் பவுனா? நான் ஏன் அதை உமக்குத் தர வேண்டும்?" எனக் கேட்டார் அமைச்சர். அதற்குப் புலவர் அரசவையில் என் பரிசு பற்றி மன்னர் அறிவித்தாரே, அதைத்தான் கேட்கிறேன்" என்றார். அதைக் கேட்டு நிதி அமைச்சர் நகைத்தார். "புலவரே! நான் பரிசு கொடுக்க மறுத்துவிட்டேன் என்பதாக அரசரிடம் போய்ச் சொல்லுங்கள்" என்றார். புலவர், மீண்டும் அரசரிடம் சென்று, அமைச்சர் பரிசுத் தொகையைத் தர மறுப்பதாகப் புகார் கூறினார்.

"அப்படியா? அவர் ஏன் உமக்குப் பரிசு அளிக்க வேண்டும்?" என்று அரசர் சர்வசாதாரணமாகக் கேட்டார். இதைக்கேட்ட புலவர் திடுக்கிட்டார். "என்ன கூறுகிறீர்கள் அரசே? என் கவியைக் கேட்டுப், புகழ்ந்து, பரிசு ஐம்பதாயிரம் பவுன் தருவதாக அறிவித்தீர்களே மன்னா" என்றார்.

"ஆமாம் புலவரே அறிவித்தேன். உங்கள் கவிதையைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். அதற்குப் பரிசு தருவதாக நான் கூறியதைக் கேட்டு தாங்கள் மகிழ்ச்சி அடைந்தீர்கள் இல்லையா?" எனக் கேட்டார் அரசர். புலவரும் "ஆமாம் மகிழ்ச்சி அடைந்தேன். மறுக்கவில்லை" என்றார். மீண்டும் அரசர் "மகிழ்ச்சி அடைந்ததோடு, போக வேண்டுமே தவிர, பரிசுத் தொகை வேறு கேட்கிறீர்களே" என்று அரசர் கூறியதைக் கேட்டதும் புலவர் மிகுந்த வேதனை அடைந்தார். புலவருக்குப் பரிசளிப்பதாகக் கூறிவிட்டு, அப்பரிசை புலவருக்கு அளிக்க நீதியற்ற அரசர் மறுத்துவிட்டார்.

வாக்குக் கொடுத்தால் அதை நிறைவேற்றுவதே தர்மமாகும். வாக்குச் சாதுர்யம் என நினைத்து வாக்குத் தவறுவது நீதியல்ல; அதர்மமே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மா - மகள் - முதலாளி ஆகியோருக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**අම්මා:** දුව ලැහැස්ති වෙන්න කඩේට යන්න.
துவ லெஹெஸ்தி வெண்ண கடேட யன்ன.
**அம்மா:** மகள் கடைக்குப் போக ஆயத்தமாகுங்கள்.

**දුව:** අම්මේ මට වළලු ඕනේ. අරන් දෙනවාද?
அம்மே மட்ட வளளு ஓணே. அரன் தெனவாத?
**மகள்:** அம்மா எனக்கு வளையல் வேண்டும். வாங்கித் தருவீர்களா?

**අම්මා:** හා.. අරන් දෙන්නම්. ඉක්මණට ලැහැස්ති වෙන්න.
ஹா.... அரன் தென்னம். இக்மணட்ட லெஹெஸ்தி வெண்ண.
**அம்மா:** ஹா.... வாங்கித் தருகிறேன். விரைவாக ஆயத்தமாகுங்கள்.

**දුව:** අම්මේ, අර කඩේ වළලු තියෙනවා.
அம்மே, அற கடே வளளு தியெனவா.
**மகள்:** அம்மா, அந்த கடையில் வளையல் இருக்கிறது.

**අම්මා:** මේ වළලු කීයද මුදලාලි?
மே வளளு கீயத முதலாளி?
**அம்மா:** இந்த வளையல் எவ்வளவு முதலாளி?

**මුදලාලි:** මේවා හොඳ ඉන්දියන් වළලු. ජෝඩුව රුපියල් පහළොවයි.
மேவா ஹொந்த இந்தியன் வளளு. ஜோடுவ ருபியல் பஹலொவய்.
**முதலாளி:** இவை நல்ல இந்தியன் வளையல்கள். ஒரு ஜோடி பதினைந்து ரூபாய்.

**අම්මා:** ටිකක් මිල අඩුකරලා දෙන්න. ජෝඩු තුනක්ම ගන්නවා.
டிகக் மில அடுகறல தென்ன. ஜோடு துனக்ம கன்னவா.
**அம்மா:** கொஞ்சம் விலை குறைத்துத் தாருங்கள். மூன்று ஜோடிகள் வாங்குவோம்.

**මුදලාලි:** එහෙනම් ජෝඩුව රුපියල් දොළහ ගානේ ගන්න. මොන පාටද ඕනේ?
எஹெனம் ஜோடுவ ருபியல் தொளஹ கானே கன்ன. மொன பாட்டத ஓனே?
**முதலாளி:** அப்படியென்றால் ஒரு ஜோடி பன்னிரெண்டு ரூபா வீதம் எடுங்கள். என்ன நிறம் வேண்டும்?


**දුව:** මට රතුපාට වළලු ඕනේ.
மட்ட ரது பாட்ட வளளு ஓனே.
**மகள்:** எனக்கு சிவப்பு நிற வளையல் வேண்டும்.

**මුදලාලි:** මෙන්න නෝනා.
மென்ன நோனா.
**முதலாளி:** இந்தாருங்கள் அம்மா.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. மகள் ஆயத்தமாகுங்கள்.
..............................................................
ii. அம்மா எனக்கு வளையல் வேண்டும்.
..............................................................
iii. இது இந்தியன் வளையல்.
..............................................................






✱ இங்கே, மேலும் சில கலப்பு வாக்கியங்கள் (Complex Sentence) தரப்பட்டுள்ளன. இவை, 'எவ்வாறு' ஒரு கருமம் செய்யப்படுகின்றது என்பதையும் 'எத்தகைய சந்தர்ப்பத்தில்' ஒரு கருமம் செய்யப்படுகின்றது என்பதையும் மற்றும் 'எங்கே' ஒரு கருமம் செய்யப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டும் விதத்தில் அமைந்த, கலப்பு வாக்கியங்களாகும். இவை முறையே Manner, Time மற்றும் Place என ஆங்கில இலக்கண ரீதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

✱ Manner (எவ்வாறு ஒரு கருமம் செய்யப்படுகின்றது என்பதைக் குறிப்பது)

(A) அந்தச் சிறுமி தனக்குக் கற்பிக்கப்பட்டுள்ளவாறே, அந்தக் கேள்விகளுக்கு விடையளித்தாள்.
✱ The girl answered the questions as she has been taught.

(B) நான் உனக்குக் கூறியுள்ளவாறே, அந்த வேலையை பூர்த்திசெய்துள்ளேன்.
✱ I have Completed the work as I have told you.

(C) உனக்குப் புத்திமதி கூறியுள்ளபடியே, நீ அந்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளாய்.
✱ You have made the arrangements as you have been advised.

✱ Time (எத்தகைய சந்தர்ப்பத்தில் ஒரு கருமம் செய்யப்படுகின்றது என்பதைக் குறிப்பது)

(A) திருடனைக் கண்டதும், பையன் அப்பால் ஓடினான்.
✱ The boy ran away when he saw the thief.

(B) சுஜாதா தனது காலையுணவை சாப்பிட்டுக்கொண்டு இருந்தவேளை, யாரோ ஒருவர் கதவில் தட்டினார்.
✱ While Sujatha was having her breakfast, somebody knocked on the door.

(C) மணி அடித்ததும், அனைத்து மாணவர்களும் தமது வகுப்பறைக்குள் சென்றனர்.
✱ When the bell rang, all the students went into their classrooms.

✱ Place (எங்கே ஒரு கருமம் செய்யப்படுகின்றது என்பதைக் குறிப்பது)

(A) பூக்களைப் பெறக்கூடிய கடைக்கு நாங்கள் சென்றோம்.
We went to the shop where we could get flowers.

(B) திருடனைக் கண்டுபிடிக்கக்கூடிய வளவுக்குள் பொலிஸார் நுழைந்தனர்.
The policemen entered the premises where they could find the thief.

(C) விளையாட்டைப் பார்க்கக்கூடிய இடத்தில், அந்தப் பையன் நின்றுகொண்டு இருந்தான்.
The boy was standing in a place where he could see the games.

(D) இதுதான் நாங்கள் கிரிக்கெட் விளையாடுகின்ற திடல் ஆகும்.
This is the ground where we play cricket.

(E) இதுதான் நாங்கள் பாண் வாங்குகின்ற கடை ஆகும்.
This is the shop where we buy bread.

(F) இதுதான் எனது தந்தை பிறந்த வீடு ஆகும்.
This is the house where my father was born.

(G) நாங்கள் தங்கப்போகின்ற இடம் எங்கே என்பது எனக்குத் தெரியாது.
I don't know the place where we are going to stay.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்டின் லூதர் கிங்கின் சிலை திறந்து வைப்பு

மனித உரிமை அமைப்பின் உலகப் புகழ்பெற்ற அமெரிக்காவின் கறுப்பினத் தலைவரான மார்ட்டின் லூதர் கிங்கின் புதிய நினைவுச் சிலையொன்றை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தியோகபூர்வமாக திறந்து வைத்துள்ளார்.

இச்சிலையின் திறப்பு விழா கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற இருந்தபோதிலும்





அமெரிக்காவில் வீசிய ஐரின் புயலின் காரணமாக, மேற்படி திறப்பு விழா ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்திறப்பு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி ஒபாமா, அமெரிக்காவின் ஸ்தாபகர்களில் ஒருவராக மார்ட்டின் லூதர் கிங் திகழ்வதாகவும், அவரது கனவு, தொலைநோக்கு ஆகியவற்றை ஈடேற்றும் தகுதியை அமெரிக்கர்கள் பெற்றிருப்பதாகவும் நாளைய நாளுக்கான உரிய முன்னேற்பாடுகளை மேற்கொண்டவர் மார்ட்டின் லூதர் கிங் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஆபிரகாம் லிங்கன், தோமஸ் ஜெபர்சன் ஆகியோரது நினைவுச் சின்னங்களுக்கு அருகிலேயே மார்ட்டின் லூதர் கிங்கின் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

ஜோர்ஜியா மாநிலத்தின் அட்லான்டா பகுதியில் 1929 ஆம் ஆண்டில் பிறந்த மார்டின் லூதர் கிங் மத குருவாகவும், மனித உரிமைகள் அமைப்பின் முன்னணித் தலைவராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டன் பாதுகாப்பு செயலரின் பதவி விலகல்

பிரிட்டனின் பாதுகாப்புச் செயலாளர் லியாம் ஃபொக்ஸ் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் லிபியா ஆகிய நாடுகளின் விடயத்தில் பிரிட்டன் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு தனக்கு தனிப்பட்ட ரீதியில் நெருக்கமான ஒருவரை சம்பந்தப்படுத்திக்கொண்டு அந்நாடுகளுக்கான வெளிநாட்டு விஜயங்களை லியாம் ஃபொக்ஸ்



மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் காரணமாகவே, அவர் பதவி விலக நேரிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பதவி விலகளைத் தொடர்ந்து ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்த லியாம் ஃபொக்ஸ் தனது தவறை ஏற்றுக்கொண்டதுடன், பிரிட்டன் வாழ் மக்களிடம் அதற்காக மன்னிப்பும் கோரினார்.

பிரிட்டன் ஊடகங்கள் மற்றும், எதிர்க் கட்சிகளின் பாரிய விமர்சனங்களுக்கும் அழுத்தங்களுக்கும் ஆளாகியதன் காரணமாகவே, லியாம் ஃபொக்ஸ் பதவிவிலக வேண்டியேற்பட்டது.

லியாம் ஃபொக்ஸின் நெருக்கமான நண்பரான வெரிட்டி என்பவர் அரசாங்கத்தின் பாதுகாப்புப் பிரிவிலோ, அமைச்சிலோ எந்த வகையிலும் சம்பந்தமில்லாதவர் என்றும் ஆனால், அவர் பாதுகாப்புச் செயலாளர் லியாம் ஃபொக்ஸின் ஆலோசகர் என்று உத்தியோகப் பற்றற்ற ரீதியில் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டு வந்துள்ளார் என்றும் இவ்வாறு இவரை தொடர்புபடுத்திக்கொண்டமை தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக இருப்பதாகவே லியாம் ஃபொக்ஸ்மீது அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

### அற்லஸ் கேள்வி - 331

**கேள்வி:** அமெரிக்காவின் கறுப்பினத் தலைவரான மார்டின் லூதர் கிங் எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?

சரியான விடை.....................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 331,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

### போட்டி இல - 329 இன் சரியான விடை: 1000 கோடி

பரிசு பெறுவோர்

எஸ். அர்ஜுனன்,
காலிங்க மாவத்தை, பொல்ஹேய்கொடை,
கொழும்பு-05.

எம். அஃப்சா,
தெலும்பு கஹவத்த, அக்குறனை.

சி.தனிசன்,
புதிய செம்மணிவீதி, கல்வியங்காடு.

# அமெரிக்காவில் கடும் மழை



அமெரிக்காவின் மத்திய பகுதிகளில் பெய்த கடும் மழையின் காரணமாக 81 பேர் மரணமடைந்துள்ளனர். எல்சல்வடோர் பிரதேசத்திலேயே அதிகமான அழிவுகள் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. மரணமடைந்தோரில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் எல்சல்வடோர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மெக்ஸிக்கோவிற்கு தெற்காக உள்ள மத்திய அமெரிக்காவின் ஹொன்டுராஸ், கவுத்தமாலா, நிக்கரகுவா, மற்றும் கொஸ்டரிக்கா ஆகிய பிராந்தியங்களிலும் மேற்படி அடைமழையின் காரணமாக, பாரிய சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மழையின் தாக்கத்தினால் ஏற்பட்ட மண்சரிவினாலும் ஆயிரக்கணக்கானவர்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர்.

## தெரிந்துகொள்வோம்



* 'ரொய்டர்' (Reuters) செய்தி நிறுவனம் எங்கிருந்து இயங்குகின்றது?
  லண்டன்
* I, II, V, X என்பவை ரோம இலக்கம் எனப்படுகின்றது. 1 .2 .3 .4. என வழங்கப்படும் இலக்கங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
  அரேபிய இலக்கங்கள்



* 'டோக்கியோ' அரண்மனை ஜப்பானிய அரச குடும்பத்தினரின் வாசஸ்தலமாகும். அதற்கமைய, போப்பாண்டவரின் வாசஸ்தலம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது? அது எங்குள்ளது?
  அப்போஸ்தலிக்க அரண்மனை, ரோம் (வத்திக்கான்)



* இலங்கையைக் கைப்பற்றிய சோழர்கள் பொலன்னறுவை நகருக்கு 'சனநாதபுரம்' என பெயரிட்டனர். அவ்வாறே, ரஜரட்டையின் தலைநகரம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
  அநுராதபுரம்
* உலகம் உருண்டை வடிவம்கொண்டது அதனை நிரூபிக்க உலகை முதன்முதலில் சுற்றி வந்தவர் யார்?
  பேர்டினன்ட் மக்கலம் (1522 ஆம் ஆண்டு)



* அணுகுண்டை முதலில் உற்பத்திசெய்து ஜப்பானில் 'ஹிரோசிமா, நாகசாகி' நகரில் போட்டுப் பாரிய அழிவை அமெரிக்கா. ஏற்படுத்தியது இந்த அணுகுண்டானது, முதலாவது தடவையாக பரீட்சார்த்தமாக எங்கு போடப்பட்டது?
  மெக்சிகோவின் நியூமெக்ஸிக்கோ பிரதேசத்திலுள்ள பாலைவனத்தில்
* சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள் புதனாகும். கோள்களில் ஒன்று எதிர்ப்பக்கமாகச் சுழல்கின்றது. அக்கோளின் பெயர் என்ன?
  யுரேனஸ்



* இந்தியாவின் தலைநகர் புதுடில்லி. பாவனையில் உள்ள நாணயம் 'ரூபா' ஆகும். அவ்வாறே, மாலைதீவுகளின் தலைநகர் எது?அந்நாட்டின் நாணயம் என்ன பெயரால் அழைக்கப்படுகின்றது?
  தலைநகர் - மாலே
  நாணயம்- 'மாலோ' ருபியா
* 'சார்க்' விளையாட்டுகள் 1984 இல் முதன்முதலில் கத்மாண்டுவில் (நேபாளம்) நடைபெற்றது. இறுதியாக 12 ஆவது சார்க் போட்டிகள் எங்கு நடைபெற்றது?
  பங்களாதேஷ் டாக்கா நகரில்





* புகையிரத என்ஜினைக் கண்டு பிடித்தவர் யார்?
  ஸ்டிவன் சன்



* 'மின்சின் லேன்'என்பது லண்டனில் தேயிலைச் சந்தை நடைபெறும் இடமாகும். லண்டன் நகரிலுள்ள உலகப் புகழ்பெற்ற மணிக்கூடு என்ன பெயரால் அழைக்கப்படுகின்றது?
  பிக்பென் மணிக்கூடு



* 'சர்வதேச தொழிலாளர்' தினம் மே 1 ஆகும். அவ்வாறே, 'சர்வதேச எழுத்தறிவு' தினம் எப்போது?
  செப்டெம்பர்-08



* உலகிலுள்ள பழமையான மொழி சமஸ்கிரதம் ஆகும். உலகில் அதிகமான மொழிகள் பேசப்படும் நகரம் எது?
  லண்டன்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி அணியில் புதிய வீரர்



தென்னாபிரிக்காவில் கிரிக்கெட் சுற்றுலா மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடர் ஒன்றிலும் கலந்துகொள்ளவுள்ளது. இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியில் அறிமுக இளம் வீரராக 'ஃபெட்ரிக் கம்மின்ஸ்' (வயது-18) என்பவர் இடம்பெற்றுள்ளார். இவர் ஒரு வேகப்பந்து வீச்சாளராவார். மூன்று முதல்தர போட்டிகளில் போட்டியிட்டு தனது திறமையை வெளிக்காட்டிய இவர், இப்போட்டியில் 12 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான 'டுவென்டி டுவென்டி' போட்டித் தொடரில் ஐந்து விக்கெட்டுகளை இவர் வீழ்த்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி நொவெம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், இரண்டாவது போட்டி நொவெம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மே.இ.தீவுகள் அணியில் ஏன் கிரிஸ் கெயில் இல்லை?





பங்களாதேஷில் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி போட்டிகளில் ஈடுபட்டு வருகின்றது. இதில் அனைவரதும் ஒரே கேள்வியாக இருப்பது மேற்கிந்திய தீவுகள் அணியின் கிரிஸ் கெயில் மற்றும் டேவியன் பிரேவோ ஆகியோர் பங்களாதேஷுடனான போட்டிகளுக்கான அணியில் ஏன் இடம்பெறவில்லை என்பதேயாகும்.

அண்மையில் நடந்து முடிந்த 'செம்பியன் லீக்ஸ்' கிரிக்கெட் போட்டிகளில் இந்த இரண்டு வீரர்களும் சகல துறையிலும் பிரகாசித்திருந்தனர்.

எனினும், மேற்கிந்திய தீவுகள் அணியின் பயிற்றுனரான ஓட்ஸ் சிப்ஸன் அண்மையில் இணையத் தளமொன்றிற்கு வழங்கிய பேட்டியில், பிரேவோ, கிரிஸ் கெயில் ஆகியோர் இல்லாமலேயே இளம் வீரர்களைக் கொண்டு மேற்கிந்திய தீவுகள் அணியை வெற்றி அணியாக்க முடியும் எனவும், இளம் வீரர்கள் மூலம் அதனை சாதிக்க முடியும் என்றும் குறிப்பிட்டிருந்தமை சுட்டிக்காட்டப்படத்தக்கது.

மே.இ.தீவுகள் கிரிக்கெட் சபையை விமர்சித்தமையின் காரணமாகவே, கிரிஸ் கெயில் இவ்வாறு ஓரங்கட்டப்பட்டிருப்பதாகவும், அவருக்கு சார்பாக குரல் கொடுத்தமைக்காக பிரேவோவும் ஓரங்கட்டப்பட்டிருப்பதாகவும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

கிடைக்கப் பெறுகின்ற உத்தியோகப்பற்றற்ற தகவல்களின் படி, பயிற்றுவிப்பாளர் கிப்ஸ் மற்றும் அணியின் தலைவர் டெரன் சமி ஆகியோர் கிரிஸ் கெயிலை மீண்டும் அணியில் சேர்ப்பதற்கு விருப்பமின்றி இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இளையோர் விளையாட்டுப் போட்டி ஒக். 27 ஆம் திகதி ஆரம்பம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், இளைஞர் விவகார அமைச்சும் இணைந்து 23 ஆவது தடவையாக நடத்துகின்ற இளையோர் விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் (ஒக்டோபர்) 27 ஆம் திகதி ஹோமாகமை பிரதேசத்தில் ஆரம்பமாகின்றது.





அதற்கமைய, ஆடவர்-மகளிர் என இரண்டு பிரிவுகளிலும் 16 விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் படும். இளைஞர் சேவைகள் மன்றத்தைச் சேர்ந்த 2,000 வீர, வீராங்கனைகள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஒக்டோபர் 30 ஆம் திகதி நிறைவடைகின்ற இப்போட்டிகளை வித்தியாசமான கோணத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டிகளில் தேசிய மட்டத்திலான சாதனையொன்றை முறியடிக்கின்ற முதலாவது போட்டியாளருக்கு விலை உயர்ந்த காரொன்று பரிசாக வழங்கப்படவுள்ளதா கவும் அறிவிக்கப்படுகின்றது.

# உலகிலேயே பணக்கார விளையாட்டு வீராங்கனைகள்

உலகிலேயே மகளிர் விளையாட்டு வீராங்கனைகளில் மிகப்பெரிய தனவந்தர் என்ற பெருமையை ரஷ்யாவின் டெஸ்ட் வீராங்கனை மரியா ஷெரபோவா பெற்றுள்ளார். கடந்த வருடம் தொடக்கம் இந்த வருடம் ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதியில் உலக அளவில் மகளிர் விளையாட்டு வீராங்கனைகளின் சொத்துக்களின் மதிப்புத் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட 'ஃபோப்ஸ்' எனப்படும் சஞ்சிகையே மேற்படி பணக்கார வீராங்கனைகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இப்பட்டியலில் உள்ளோரில் 7 பேர் டென்னிஸ் வீராங்கனைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சொத்து விபரங்களின்படி, ரஷ்யாவின் மரியா ஷரபோவா 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்றுள்ளார்.



இரண்டாவது இடத்திலுள்ள மற்றுமொரு டென்னிஸ் வீராங்கனையான டென்மார்க்கின் கெரொலமினின் சொத்து விபரம் 12.5 மில்லியன் அ.டொலர்களாகும்.

இதேவேளை, மோட்டார் வாகனப் போட்டி வீராங்கனையான அமெரிக்காவின் டேனிக்கா பெட்டரிக்காவின் சொத்து 12 மில்லியன் டொலர்களாகும். இவருக்கு மூன்றாவது இடம் கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் மற்றுமொறு டென்னிஸ் வீராங்கனையான செரினா வில்லியம்ஸ் நான்காவது இடத்தினைப் பெற்றுள்ளதுடன், அவரது சொத்தின் மதிப்பு 11.5 மில்லியன் அ.டொலர்களாக கணிக்கப்பட்டுள்ளது.


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | - ரூபா 390/= | 6 மாதத்திற்கு | - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | - ரூபா 780/= | 1 வருடத்திற்கு | - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ...................................

முகவரி - ...................................

தொ.பேசி - ...................................

பத்திரிகையின் பெயர் - ...............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)

..............................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**


# ஹொங்கொங் போட்டிகளில் இலங்கை அணியின் தலைவராக கப்புகெதர

1992 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் ஹொங்கொங்கில் நடைபெற்று வருகின்ற அணிக்கு ஆறுபேரைக்கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடர் இம்மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அணியின் தலைமைப் பொறுப்பு சாமர கப்புகெதரவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை தேசிய அணியில் நடுவரிசை வீரராக இருந்த இவர், தற்போதைய தேசிய அணியில் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் இந்த வருடம் நடைபெற்ற 50 ஓவர்களைக் கொண்ட உலக கிண்ணப் போட்டிகளில் இவர் இலங்கை அணியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெள்ளியில் ஓசோன் படலம்

## 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' கண்டுபிடிப்பு









வெள்ளிக் கிரகத்தில் ஓசோன் படலம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சிக் கழகமான (ஈஸா) அறிவித்துள்ளது. பூமிக்கு மேலாகக் காணப்படும் படலத்தைவிட, 100 மடங்கு மெல்லிய அடர்த்தி கொண்டதாகவே வெள்ளியின் ஓசோன் படலம் காணப்படுகிறது.

ஐரோப்பாவின் ஈஸா நிறுவனத்தின் 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' என்ற விண்கலமே இதனைக் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விண்கலம் வெள்ளியின் வளிமண்டலத்தினூடாக, விண்மீன்களை ஆராய்ந்தபோதே, இந்த ஓசோன் படலத்தைக் கண்டுபிடித்துள்ளது. வெள்ளியின் வளிமண்டலத்தை ஊடுருவி தொலைவில் உள்ள விண்மீனை ஆய்வு செய்த போது, அந்த விண்மீன் எதிர்பார்த்ததைவிட, மங்கலாகத் தெரிந்தது. அதற்குக் காரணம், வெள்ளியில் உள்ள ஓசோன் படலம்தான் என்று பின்னர் கண்டறியப்பட்டது.

தூரத்திலிருக்கும் விண்மீன்களில் இருந்து வரும் புறஊதாக் கதிர்களின் பெரும் பகுதியை இந்த ஓசோன் படலம் உறிஞ்சி விடுவதால், இந்த விண்மீன்கள் தெளிவற்றுக் காணப்படுகின்றன. இதுவரையில் பூமி மற்றும் செவ்வாய்க் கிரகத்தில் மட்டுமே ஓசோன் படலம் கண்டறியப்பட்டிருந்தது. இந்நிலையில், ஏனைய கோள்களில் உயிரினங்களைக் கண்டுபிடிக்கும் வானியலாளர்களின் முயற்சிக்கு இக்கண்டுபிடிப்பு பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.


வெள்ளியின் ஓசோன் படலம் வெள்ளியில் இருந்து 100 கி.மீற்றர் உயரத்தில் உள்ளதாக பிரான்ஸின் லாட்மொஸ் ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த ஃபிராங்க் மொண்ட்மெசின் தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இது பூமியின் ஓசோன் படல அமைவைவிட, மூன்று மடங்கு உயரமானதாகும்.

ஓசோன் படலம் என்பது ஒப்பீட்டளவில் உயர் செறிவுகளையுடைய ஓசோனைக் ($O_3$) கொண்ட வளிமண்டலத்தில் உள்ள ஒரு படலமாகும். பூமியில் வாழ்பவர்களுக்குத் தீங்கை ஏற்படுத்தக்கூடிய சூரியனின் புறஊதாக் கதிர்களை 93%-99% வரை இப்படலம் உறிஞ்சிக்கொள்கிறது.



# விண்வெளியில் மனிதனின் உயரம்

நமது உடலின் கீழ்ப்பகுதிகளுக்கு குருதி சீராகப் பாய்வதற்கு பூமியின் ஈர்ப்புச்சக்தியும் ஒரு காரணம்.



பூமியில் இருக்கும் போது, சிறிது நேரம் தலைகீழாக நின்றால் தலைப்பகுதிக்கு குருதி 'குப்'பென்று பாய்வதை நீங்கள் உணர்ந்திருக்கலாம். ஆனால், விண்வெளியில் விண்கலம் பூமியைச் சுற்றிவரும் உயரத்தில் ஈர்ப்புச்சக்தி மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. அதன் விளைவாக எடையற்ற நிலை ஏற்படுகின்றது.



இத்தகைய எடையற்ற நிலையில் விண்வெளி வீரர்களின் கால் பகுதிகளுக்கு குருதி ஓட்டம் குறைவடைகின்றது. தவிர, விண்வெளி வீரர்களால் புவியீர்ப்பற்ற நிலையில் பூமியில் நடமாடுவது போன்று விண்வெளியில் குறிப்பாக, விண்கலத்திற்குள் நடமாட முடிவதில்லை. மாறாக, அவர்கள் அந்தரத்தில் மிதந்தே செல்கின்றனர். இதன் காரணமாக, கால் தசைகளுக்கு உரிய வேலை இல்லாமையால், கால்கள் சூம்பி விடுகின்றன. தொடைப்பகுதியின் சுற்றளவும் குறைகிறது.

அத்துடன், உடலின் மேல்பகுதியில் உடல் திரவங்கள் அதிக அளவில் தேங்க ஆரம்பிப்பதால், அவை பெருத்துவிட்டது போலாகின்றன. மார்புப் பகுதியிலும் குருதி அதிகளவில் தங்க ஆரம்பிக்கிறது. முதுகெலும்பில் வளையம் வளையமாக அமைந்த எலும்புகளுக்கு இடையே உள்ள பகுதிகளில் குருதி தங்குவதால், வளைய எலும்புகள் ஒன்றிலிருந்து மற்றொன்று சற்றுத் தள்ளப்படுகின்றன.

இதன் காரணமாக, விண்வெளியில் இருக்கும்போது விண்வெளி வீரர்களின் உயரம் ஓரிரு அங்குலம் அதிகரிக்கின்றது. எனினும், அவர்கள் பூமிக்குத் திரும்பிய சில நாட்களின் பின்னர் குருதி ஓட்டம் பழைய நிலைக்குத் திரும்பியதும் அவர்கள் மீண்டும் பழைய உயரத்தைப் பெற்றுவிடுகிறார்கள்.

# சூரியனின் ஈர்ப்பாற்றல்










விண்வெளியில் கோள்களுக்கு இடையில் இடைவிடாமல் பெருகிப் பாய்ந்துகொண்டிருக்கும் மின்னூட்டமுள்ள துகள்களையே 'சூரியக்காற்று' என்று விண்வெளி ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சூரியனின் 'கொனரா' (Conora)பரப்பிலிருந்தே, இந்த புரோட்டன் மற்றும் எலக்ட்ரோன்களின் காற்று வீச்சு வெளிப்படுகின்றது.

கொனரா பரப்பிலிருந்து வெளியாகும் வாயுக்கள் அயனிநிலையில் உள்ளவை. மிக அதிக வெப்ப ஆற்றல் கொண்டவை. சூரியனின் ஈர்ப்பாற்றலால் இந்த அயனிநிலை வாயுக்களைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. இந்த அயனிநிலை வாயுவை 'பிளஸ்மா' (plasma) என்றும் கூறுவார்கள். கட்டுக்கடங்காத இந்த அயனிகள் விண்வெளியில் வெள்ளம் போன்று சீறிப் பாய்கின்றன. சூரியனின் மின்காந்தப்புலம் இந்த அயனிகள் விரிவடைவதைக் கட்டுப்படுத்துகிறது. சாதாரணமாக, கடும் வெப்பத்தால் ஏற்படும் வாயுக்களின் இயக்கம் ஒழுங்கற்றுத் தாறுமாறாக இருக்கும்.

இந்நிலையிலும் சூரியன் கோள வடிவமாக இருப்பதற்குக் காரணம், அதன் அசுர ஈர்ப்பு ஆற்றல்தான். நமது புவியின் ஈர்ப்பு ஆற்றலைவிட, 27 மடங்கு அதிகமாக சூரியனுக்கு ஈர்ப்பாற்றல் உள்ளது. இதனால்தான் சூரியனால் வெகு தொலைவில் உள்ள கோள்களையும் ஈர்த்து, ஒவ்வொன்றையும் அந்தந்தப் பாதையில் சுற்றிவரச் செய்ய முடிகின்றது. சில வேளைகளில் அதன் ஈர்ப்பாற்றலையும் மீறிக்கொண்டு அதன் பரப்பில் இருந்து சூரியக் கொழுந்துகள் சீறிப் பாய்வதுண்டு.

சூரியனின் பரப்பு, குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு வாயுக்கடலாகும். சூரியனின் ஈர்ப்பாற்றல்தான் அக்கடலைக் கரை தாண்டாமல் வைத்துள்ளது. எனினும், சிலவேளைகளில் அக்கடலில் இருந்து செந்நிறச் சுவாலைகள் சீறிப் பாய்வதுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 4336
ஜே.எஃப்.நிஹ்மா,
நிக்கவெவ,
ஹொரவப்பொத்தானை.


அங்.இல: 4337
ஆய்ஷா ஸினான்,
ஸாவியா வீதி,
பேருவளை.


அங்.இல: 4338
அஸார் மொஹமட்,
பெரிய பாலத்தடி வீதி,
ஏறாவூர்-01.


அங்.இல: 4339
க.லக்சிகா,
சாந்திபுரம்,
கிளிநொச்சி.


அங்.இல: 4340
யோ.தனுஷ்கா,
பலகல தோட்டம்,
பண்டாரவளை.


அங்.இல: 4341
ஜி.பவாணி,
கடுகண்ணாவ வீதி,
கம்பளை.


அங்.இல: 4342
ஏ.வேஜினி பிகிறாடோ,
பள்ளிமுனை,
மன்னார்.


அங்.இல: 4343
எம்.இர்பான்,
2ஆம் வட்டாரம்,
எருக்கலம்பிட்டி.


அங்.இல: 4344
மு.ஆரிப்,
விடுதி வீதி,
காத்தான்குடி-06


அங்.இல: 4345
எஸ்.எம்.ஆபிக்,
கடுகெலியாவ,
கெகிராவ.

## சாதனையாளர்: நோய் எதிர்ப்புச்சக்தி

# ஜூல்ஸ் பொர்டெட்


(கி.பி.1870-1961)

பெல்ஜியம் நாட்டவரான ஜூல்ஸ் பொர்டெட் 1870 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி பிறந்தார். மனித சமுதாயத்திற்கு மிகவும் பயன்தரும் ஆய்வுகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்ட இவர், மிகக் குறுகிய ஒரு பிரிவான 'நுண்கிருமிகள்' என்ற பிரிவை ஆய்வுசெய்வதற்காக தெரிவுசெய்தார். இது தொடர்பான தீவிர ஆய்வுகளை இவர் மேற்கொண்டு நுண்கிருமிகளுக்கும் நோய் எதிர்ப்பு குணத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? என்பதை தமது ஆய்வின் முடிவுகளாக வெளியிட்டார். இத்தகைய கண்டுபிடிப்புக்காக அவருக்கு 1919 ஆம் ஆண்டில் மருத்துவத்திற்கான நொபெல் பரிசு கிடைத்தது.

நோய் எதிர்ப்பு மண்டலத்தில் தொற்றுநோயை ஏற்படுத்தவல்ல கிருமிகளை உடலுக்குள் நிலைக்கவிடாமல் செய்வதில் செல்களுக்குள்ளேயே இடம்பெறும் ஒரு தானியக்க முறையை (Automatic) இவரே கண்டுபிடித்தார். 1890 களில் திரவக்கிருமிகள் உடலுக்குள் செல்லாமல் தடுக்கும் நோய் எதிர்ப்பு இயக்கம் மட்டுமே அறியப்பட்டிருந்தது. திடப்பொருளான பக்றீரியா போன்ற நுண்கிருமிகள் உடலுக்குள் நுழையாமல் தடுக்கும் நோய் எதிர்ப்பு மண்டலத்தைக் கண்டுபிடித்த பெருமையும் ஜூல்ஸ் பொர்டெட் அவர்களையே சாரும்.

அத்துடன், உடல் செல்களுக்கு நோய் எதிர்ப்பு மண்டலம் எவ்வாறு ஊட்டச்சத்துக்களை அனுப்ப உதவுகிறது என்ற தனிப்பட்ட ஆய்வினையும் மேற்கொண்டார். அதில் வெற்றியும் கண்டார். குருதியின் வெள்ளை நிறப்பாகத்தை வெளியிலிருந்து செலுத்தப்படும் குருதியோடு இணைக்கும்போது, குருதியின் செந்நிறப்பாகம் வெடித்து அதிலிருந்து ஹீமோகுளோபின் எனும் குருதிக் கூறு வெளியாகிறது என்பதையும் ஜூல்ஸ் பொர்டெட் கண்டறிந்தார். இதற்கு முன்னர் மனிதக் குருதியினை குழுப்பிரிவினையின்றி அனைவருக்கும் ஏற்றலாம் என்ற தவறான அணுகுமுறையே இருந்தது. அதற்கு ஜூல்ஸ் பொர்டெட் உறுதியான முற்றுப்புள்ளி வைத்தார்.

குருதியில் இயற்கையிலேயே அமைந்துள்ள 'எதிர்வினைப் பொருட்கள்' வெளியிலிருந்து உள்ளே நுழையும் கிருமிகளை குறிப்பாக, பக்றீரியா, வைரஸ் போன்றவைகளை தாமாகவே கண்டறிவதாகவும் மேலும், இவற்றை உடலுக்குள் அனுமதிக்காமல் தடுத்து நிறுத்துமளவுக்கு குருதி வெள்ளை அணுக்களின் துணையோடு போர் புரிவதையும் குறிப்பிட்டார். செல், செல்திசுக்கள், குருதி, குருதி அணுக்கள், நோய் எதிர்ப்பு குணாதிசயங்கள், நுண்ணுயிரிகள் போன்ற துறைகளின் ஆய்வுகளில் இவரின் ஆரம்பகட்ட கண்டுபிடிப்புகளே, இத்துறையின் பல முன்னேற்றங்களுக்கு படிக்கட்டுகளாக இன்றளவும் உள்ளன. இத்தகைய மாபெரும் மருத்துவ சாதனைகளுக்கு முன்னோடியான ஜூல்ஸ் பொர்டெட் அவர்கள் 1961 ஏப்ரல் 6 ஆம் திகதி மரணமடைந்தார்.

-ஆர்.ஜே

# வெள்ளை உலோகம்: பிளட்டினம்



பிளட்டினம் மிகவும் அரிதான ஒரு வெள்ளை உலோகமாகும். தங்கத்தை விட விலை உயர்ந்தது மட்டுமன்றி; மதிப்புமிக்கது. தனித்தன்மை வாய்ந்தது. இந்த உலோகம் அனைவராலும் விரும்பப்படுகின்ற, ஆடம்பரமான, விலை உயர்ந்த பொருளாகவும் இருக்கின்றது. தூய பொருளாக இருக்கும்பொழுது இந்த உலோகம் வெண் சாம்பல் நிறமுடையது. எளிதில் அரிக்கப்படாத இந்த உலோகம் அதிக வெப்பத்தையும் தாங்கக்கூடியது.



Pt என்பது பிளட்டினத்தின் ரசாயனக் குறியீடாகும். பல்லேடியம், ஒஸ்மியம், போடியம், இரிடியம், ருத்னியம் போன்றவை பிளட்டினத்தின் குடும்ப வகைகளாகும். 10 தொன் உலோகத் தாதிலிருந்து ஓர் அவுன்ஸ் பிளட்டினத்தை மட்டுமே பிரித்தெடுக்க முடியும். இதன் காரணமாகவே, இது விலை உயர்ந்த உலோகமாகக் காணப்படுகின்றது. மேலும், பிளட்டினமானது, ஸ்ட்ரெப்டோமைசின் போன்ற மருந்து தயாரிப்பதற்கு சிறந்த ஊக்கியாகப் பயன்படுகின்றது. செயற்கை விற்றமின்கள், புற்றுநோய்க்கான சிஸ்ப்ளட்டின் என்ற மருந்தைத் தயாரிக்கவும் பிளட்டினம் உபயோகப்படுகின்றது.

இயற்கையில் கிடைக்கப்பெறும் பிளட்டினம் பற்றியும் பிளட்டினம் மிகுந்த கலவைப்பொருட்கள் பற்றியும் நீண்டகாலமாக மக்கள் அறிந்து வைத்துள்ளனர்.

கொலம்பஸின் காலத்திற்கு முன்பிருந்தே ஐக்கிய அமெரிக்க பழங்குடியினர் பிளட்டினத்தைப் பற்றி அறிந்திருந்தனர். ஆயினும், 1557 இல்தா பிளட்டினத்தைப் பற்றிய செய்தியைக் கூறிய இத்தாலியரான ஜூலியஸ் சீசர் ஸ்கெலிகர் என்பவர் பனாமா, மெக்சிகோ ஆகிய இடங்களில் பிளட்டினம் கிடைப்பதைப் பற்றியும் அத ஸ்பானியரது தொழிற்கலை அறிவால் உருக்க முடியாமல் இருந்ததெனவும் குறிப்பிட்டுள்ளார். தற்போது தென் ஆபிரிக்காவிலேயே அதிகளவு பிளட்டினம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இரண்டாவது இடத்தில் ரஷ்யாவும் கெனடாவும் இருக்கின்றன.




படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
பாடசாலை:..............................
வகுப்பு:..............................
திகதி:..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ட்டிக் கடற்பரப்பிலும் ஓசோன் துளை



வாகன-தொழிற்சாலைக் கழிவுகள், காடுகள் அழிக்கப்படுதல், நிலம், நீர் மற்றும் காற்று வேகமாக மாசடைதல் காரணமாக, ஓசோன் மண்டலத்தில் துவாரம் ஏற்பட்டு ருகின்றது. இது, சுமார் 97 லட்சம் சதுர மைல்கள் (250 லட்சம் சதுர மீற்றர்கள்) அளவில் மிகத் தீவிரமாக இருக்கின்றது. இந்த துவாரம் தற்போதைய வட அமெரிக்கக் கண்டத்தின் பரப்பளவுக்குச் சமமாகக் காணப்படுகின்றது என அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

2006 ஆம் ஆண்டு 1,060 லட்சம் சதுர மைல்கள் அளவுக்கு இத்துவாரம் இருந்துள்ளது. 1980-1990 களில் இத்துவாரம் மேலும் விரிவடைந்துள்ளது. ஆர்ட்டிக் கடல் பகுதியில் புவிக்கு மேலுள்ள வளிமண்டலத்தில் கடுமையான





குளிர்ச்சி ஏற்பட்டமையால், ஓசோன் படலத்தைக் கரைய வைக்கும் ரசாயனங்கள் உயிர்ப்படைந்து துவாரத்தைப் பெரிதாக்கியுள்ளன. மேலும் 'க்ளோரோஃப்ளோரோ' காபன்களின் வெளியேற்றமே இத்தகைய நிகழ்வுக்கு காரணமாக அமைந்ததால், அவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால், ஓரளவுக்கு ஓசோன் படலம் மீட்சி பெற்று வந்தது. ஆயினும், மிக மெதுவாக இச்சிதைவு தொடர்ந்தவண்ணமே உள்ளது. பூமியிலிருந்து 8.7 மைல்-13.7 மைல் வரையிலான உயரத்திலேயே இச்சிதைவு ஏற்பட்டிருக்கிறது. தற்போதைய புதிய ஆய்வின்படி, ஓசோன் படலத்தில் முதல் முறையாக ஆர்ட்டிக் கடற்பரப்பிலும் துவாரம் ஏற்பட்டிருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

# மீள்சுழற்சி செய்யப்படும் பழைய டயர்கள்



உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் 100 கோடி டயர்கள் வீணாக குப்பையில் வீசப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இவற்றை மீள்சுழற்சி செய்வதன்மூலம் புதிய டயர்களைத் தயாரிக்கலாம் என்றும் புதிய றப்பர் வீதிகளை அமைக்கலாம் என்றும் கூறுகின்றனர் அவுஸ்திரேலிய ஆய்வாளர்கள்.



பழைய டயர்களை குப்பையோடு குப்பையாக வீசுவதால் நிலத்தடி நீர், சுற்றுச்சூழல் மாசுபடுகின்றது. இதனைத் தவிர்ப்பது தொடர்பாகவே அவுஸ்திரேலியாவில் உள்ள டீகின் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், இத்தகைய பழைய டயர்களில் உள்ள ரசாயன கலப்புகள் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதோடு, அவற்றை எரிப்பதனால் வெளியாகும் ரசாயன புகை வளிமண்டலத்தில் கலந்து காற்றை மாசடையச் செய்கின்றது.



பழைய டயர்களில் தேங்கும் நீரில் டெங்கு, மலேரியா நுளம்புகள் உற்பத்தியாகி பல விதமான நோய்களையும் ஏற்படுத்துகின்றன.


இத்தகைய காரணங்களால், ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தாமல் குறைந்த அளவு மின் சாரத்தைக் கொண்டு டயர்களை மீள்சுழற்சி செய்யும் முறையை கண்டறிந்துள்ளதோடு, இதனைப் பயன்படுத்தி புதிய டயர்கள், றப்பர், கார் பாகங்கள், வீதி சீரமைப்பிற்கு பயன்படும் தார் உற்பத்திக்கான ரசாயனங்களை உற்பத்தி செய்ய முடியும் என்கின்றனர். இந்த மீள்சுழற்சியின்மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றும் கூறப்படுகின்றது.

# மீன் மழை

சில பகுதிகளில் மழை அதிகளவில் பெய்யும்போது மீன்களும் சேர்ந்து தரையில் விழுவதே 'மீன் மழை' எனப்படுகின்றது. உலகின் பல இடங்களில் இந்த மீன் மழை பெய்துள்ளது. முதல் நூற்றாண்டின் எழுத்தாளர் பிளினி என்பவர் புயல் மழை பற்றியும் அதனோடு விழுந்த மீன்கள் மற்றும் தவளைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இந்த மீன் மழையில்



பல்வேறு விதமான மீன் வகைகள் விழுகின்றன. நன்னீர் பகுதிகளில் வாழும் நன்னீர் மீன்களும் கடல் பகுதிகளில் வாழும் கடல் மீன்களும் நீர்வள வாய்ப்புகளே




இல்லாத இடங்களில் மழையுடன் சேர்ந்து விழுகின்றன. இவற்றில் சில மீன்கள் இறந்தும் அழுகிய நிலையிலும் சில மீன்கள் தரையில் உயிருடனும் விழுகின்றன.

இந்த ஆச்சரியமான மீன் மழை பெய்வதற்கு என்ன காரணம் தெரியுமா? கடுமையாக வீசும் சுழல் காற்றே இதற்குக் காரணமாகும். இத்தகைய சுழல்காற்று வீசும்போது, தரையில் இருக்கும் இலை, குழைகள், சருகுகளை மேலே இழுத்துச் செல்லப்படுவதைக் காணலாம். அவ்வாறே, நன்னீர் குளத்தில் அல்லது கடலில் சுழல் காற்று வீசும்போது, அதில் உள்ள மீன்களையும் சேர்த்து காற்று மேலே அள்ளிச் செல்கின்றது. மேகம் குளிர்ந்து மழையாகப் பெய்யும்போது, மேலே சென்ற மீன்கள் மழைநீரோடு கீழே விழுகின்றன. இதுதான் மீன் மழை பொழிவதற்கான காரணமாகும். இந்த மீன் மழை எங்கே, எப்போது பெய்யும் என்பதை சுழல் காற்றே தீர்மானிக்கின்றது.



# உண்மையை வரவழைக்கும் காந்தம்



காந்தத்தின்மூலம் ஒருவரிடம் இருந்து உண்மையை வரவழைக்கலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள். இதன்மூலம் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டு, வாய் திறக்க மறுக்கின்ற நபர்களிடம் இருந்து உண்மையை வரழைக்க முடியும் என நம்புகின்றனர். இது தொடர்பான ஆய்வொன்றினை மேற்கொண்ட எஸ்தோனிய ஆய்வாளர்கள், காந்தத்தினால் மூளையின் முன்பகுதியை தூண்டும்போது, அவர் பொய் சொல்வதைத் தடுக்க முடியும் என்கின்றனர்.




நெற்றிக்கு நேரே பின்புறம் உள்ள 'டர்சோலேட்ரல் பிரிபிரண்டல் கார்டெக்ஸ்' என்ற மூளைப்பகுதியை காந்தத்தால் தூண்டுவதன்மூலம் ஒருவரை உண்மை பேசவோ பொய் பேசவோ வைக்கலாம் என்கின்றனர். இப்பகுதியின் இடதுபக்கம் அல்லது வலதுபக்கத்தில் எந்த உணர்வு தூண்டப்படுகிறதே. அதைப்பொறுத்தே இது அமைகின்றது. ஆயினும், மூளையில் 'பெரியிடெல் லூப்' பகுதியில் காந்தத்தால் தூண்டுவது குறிப்பிட்ட நபர் முடிவெடுப்பதில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை என்றும் கண்டுபிடித்துள்ளனர். நேர்மை, நீதிநெறி குறித்த ஒருவரின் சிந்தனையை சக்தி வாய்ந்த காந்தத்தால் மாற்ற முடியும் என்பது வியத்தகு உண்மை என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைவை நோக்கிச் செல்லும் DTP கணினி பாவனை!






தட்டச்சு (டைப் ரைட்டர்), ஃப்ளொப்பி டிஸ்க் ஆகியன வற்றைப் போன்றே மேலும் சில காலங் களில் 'டெஸ்க் டொப்' (Desck Top) DTP கணினியும் பாவனையிலிருந்து இல்லா மல் போய்விடும் என்று அமெரிக்காவைச் சேர்ந்த கணினி வல்லுனரான கலாநிதி மார்க் டீன் என்பவர் தெரிவித்துள்ளார்.

மார்க் டீன் கணினித்துறையைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான ஒருவராவார். எப்படியென்றால், இன்று பாவனையிலுள்ள 'டெஸ்க்டொப்' கணினியின் முன்னோடிக் கணினியான ஐ பி எம் 5150 (IBM 5150) கணினியைத் திட்டமிட்டு உரு வாக்கியவர் இவர்தான். இக்கணினிக்கு பேட்டன்ட் காப்புரிமை ஒன்பது இருந்தது இதில் மூன்று இப்போதும் மார்க் டீனின் உரிமத்தி லேயே உள்ளது.




சரி இனி விடயத்திற்கு வருவோம். 'டெஸ்க் டொப்' கணினியின் பாவனை இல்லாமல் போய் விடும் என்று அவர் கூறியது, 'டெஸ்க்டொப்' கணினி அறிமுகமாகி 30 வருடங்கள் நிறைவ டையும் சிறப்பு நாளை முன்னிட்டு நடைபெற்ற விழாவிலேயேயாகும்.

தற்போது பாவனையிலுள்ள 'டெஸ்க்டொப்' கணினியின் முன்னோடியான ஐ பி எம் 5150 கணினி 1981 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதமே அறிமுகமாகியிருந்தது. இந்தக் கணினியை உருவாக்கியபோது தான் இந்தக் கணி னியின் மறைவு காலத்தை நேரில் காணும் அள விற்கு தான் உயி ருடன் இருப்பேன் என்று எண்ணியி ருக்கவில்லை என்றும் மார்க்டீன் குறிப்பிட்டிருந் தார்.




ஆனால், இப்போது எல் லாமே மாறிவிட் டது. தற்போது

## டெப்லட் கணினியின் ஆதிக்கமே இனி உலகில்



'டெப்லட்' கணினியைப் பயன் படுத்துகின்ற அவர் எதிர்கால உலகின் பிரபல்யம் மிக்க கணினியாக இருக்கப்போவதும் 'டெப்லட்' கணினிதான் என்று குறிப்பிடுகின்றார். இன்றைய உலகம் போகின்ற நவீன போக்கினைப் பார்க்கையில் இது மிகத் தெளிவாகத் தெரிவதாக வும் அவர் மேலும் கூறுகின்றார்.

கணினித்துறை சந்தை குறித்தான ஆய்வு களை நடத்துகின்ற கார்ட்டனர் (Gartner) என்ற ஆய்வு நிறுவனமும் கடந்த ஏப்ரல் மாதமளவில் 'டெப்லட்' கணினி குறித்து எதிர்வுகூறலை தெரிவித்து வந்திருந்தது. அதன்படி, இந்த வருட இறுதியின்போது, உலகம் பூராகவும் விற்றுத் தீருகின்ற டெப்லட் கணினிகளின் எண்ணிக்கை 7 கோடியைத் தாண்டிவிடும் என்றும் 2015 ஆம் ஆண்டை அடைகையில் இந்த எண்ணிக்கையானது,வருடத்திற்கு 30 கோடி என்ற கணக்கில் அதிகரித்துவிடும் என்றும் அதேவேளை, அதற்கு சரிசமமாக 'டெஸ்க்டொப்' கணினியின் விற்பனை சரிவைக் கண்டுவிடும் என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும் டெஸ்க்டொப் கணினியின் பாவனை குறையத் தொடங்கியுள்ள போதிலும் அதன் அழிவு விரைவில் ஏற்பட்டுவிடாது என 'மைக்ரோ சொஃப்ட்' நிறுவனத்தைச் சேர்ந்த ஃபுருன்க் ஷோ என்பவர் பி. பி. ஸி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். இந்த வருடத்தில் மாத்திரம் 40 கோடி டெஸ்க்டொப் கணினிகள் விற்கப்பட்டி ருப்பதை அவர் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடுகின்றார்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 26, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org